June 1935

N35-8.11
186952

1340 /1340

REGD. No. M. 2302.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

வளமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

19 JU… MADRA…



# சிவநேசன்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு ௪. § பலவான்குடி—யுவ—ஆனி § திங்கள் ௧௧.



| எண் | உள்ளுறை. | பக்கம். |
|---|---|---|
| 1. | செட்டிநாட்டு ராஜா அவர்களின் சீரிய வரவு | 261 |
| 2. | மகாராணியாரின் வாக்குறுதி | 265 |
| 3. | சிவநேசன் அறிவிப்பு | 266 |
| 4. | மதிப்புரை மஞ்சரி | 267 |
| 5. | ஒரு அன்பரின் பிரிவு | ,, |
| 6. | ஆளுடைய அடிகள் அருண்மொழி யுவமை | 269 |
| 7. | செய்ந்நன்றி யறிதல் | 272 |
| 8. | உயர்ந்தோர் கூறும் உறுதி மொழிகள் | 275 |
| 9. | சுயராஜ்ஜியம் | 276 |
| 10. | பொய்யர் மொழிப்புலவர் சரித விபரீதம் | 277 |
| 11. | தேவிகாலோத்தர ஆகமம் | (89—100) |



ஆசிரியர்:— ராம. த. ராம. இராமசாமி செட்டியார், பலவான்குடி.

# செய்தித்திரட்டு.

**உள்ளூர்:**—திருவாசகபாடசாலையில் வைகாசி எஉ மூலநாள் திருஞானசம்பந்தப் பெருமானார் குருபூசை செய்யப்பெற்றது. இம்மதி உகஉ மகநாள் மாணிக்கவாசகர் குருபூஜையும், குமாரவிநாயகர் திருக்கோயிலிலும் நகரச்சிவாலயத்திலும் இம்மதி உகூஉ உத்திரநாள் சிதம்பரேசர் திருமஞ்சனமும் தெரிசனமும் நடைபெறும். வைகாசி மாதக் கடைசியில் நல்ல மழையுண்டு. தென்றல் வீசுகின்றது.

**கோநகர்:**—ஞானசம்பந்த நற்சபையின் இருபத்துமூன்றும் ஆண்டு விழா வைகாசி கஙஉ மறைத்திருவாளர் பண்டித முத்துவேங்கடாசல மையரவர்கள் தலைமையில் நன்குநடைபெற்றது. உடுப்பி மடாதிபதி இவ்வூருக்கு விஜயம் செய்துள்ளார். மழைபெய்துளது.

**திருவாரூர், விஜயபுரம்:**—சென்னை மாகாண பலசாலிகளின் முதலாவது மகாநாடு இம்மதி க, உ உகளில் தஞ்சை சித்தவைத்தியசரபம் டாக்டர் A. சோதி பாண்டியன் அவர்கள் தலைமையில் திறமையுடன் நிறைவேறியது.

**செட்டிநாடு வைத்தியசாலை:**— காரைக்குடியருகிலுள்ள டாக்டர் T. S. செட்டி அவர்களின் ஆஸ்பத்திரி நர்சிங்ஹோமில் புதிய ஆலோசனை மண்டபமும், சத்திர சிகிச்சை மண்டபமும் தேவகோட்டை சப் கலெக்டர் மகா-ள-ள-ஸ்ரீ M. P. பாய் I. C. S. அவர்களால் வைகாசி ௩கஉ திறந்து வைக்கப்பெற்றன.

**கொழும்பு:**—இலங்கைநாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் சங்கத்தின் எட்டாம் ஆண்டு விழா வைகாசி உஅஉ இனிது நிறைவேறியது.

**கண்டவராயன்பட்டி:**—பணிச்சாருடையவர் தருமகலாசாலையின் ஐந்தாவதாண்டுவிழா வைகாசி ௩௦உ தேவகோட்டை வழக்கறிஞர், மகா-ள-ள-ஸ்ரீ M. G. முகுந்தராஜய்யங்காரவர்கள் தலைமையில் வைபவமாக நடைபெற்றது.

**இலக்ஷ்மிபுரம்:**—சொக்கலிங்க வித்தியாசாலையின் எட்டாவதாண்டு விழா வைகாசி கரு உ திருச்சிராப்பள்ளி நேஷனல் காலேஜ் பிரின்ஸ்பால் திரு. V. சாரநாதன் M. A. அவர்கள் தலைமையில் விரிவுரைகளும், மாயாவீரன் நாடகம், கும்மி, கோலாட்டங்களும் நிகழ இனிது நடைபெற்றது. அறிக்கைப்பத்திரம் வித்தியாசாலையின் அபிவிருத்தியை விளக்குகின்றது.

**காரைக்கால்:**— செங்குந்தர் சிவபஜனை மடத்தில் வைகாசி எஉ திருஞானசம்பந்தப்பெருமானாரின்குருபூஜையும், சென்னை, திரு. தி. அ. சண்முகமுதலியாரவர்களால் திருஞானசம்பந்த சுவாமிகளின் சரித்திரப் பிரசங்கமும் செய்யப்பெற்றன. சைவசித்தாந்த வித்தியாச்சிரமத்தில் வைகாசி அஉ திருஞானசம்பந்தப் பெருமானாரின் திருநாளை முன்னிட்டு பலவான்குடி 'சிவநேசன்' இராமசாமி செட்டியாரால் திருஞானசம்பந்த சுவாமிகளின் திருச்சரிதம் பிரசங்கிக்கப் பெற்றது. திருவாளர்களான காரியதரிசி வை. சுப்பையா அவர்கள்; ரிஜிஸ்ட்ரார் ச. இராஜகணபதி யவர்களின் நன்முயற்சி போற்றுந்தகையது.

**திருச்செங்கோடு:**—அர்த்தநாரீசுவரரின் பஞ்சகிருத்தியதிருவிழா, வைகாசி உசஉ கொடியேறி நடைபெறுகின்றது. இன்று ரிஷபவாகனக் காட்சியும் ௬உ விசேஷ உற்சவங்களும், ருஉ சுவாமி திருமலைக்கெழுந்தருளலும் ஆம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

பலவான்குடி.


| ஆண்டு அ | யுவ—ஆனி 1935—ஜூன் | திங்கள் கக |
|---|---|---|


உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்குமரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

## செட்டிநாட்டு ராஜா அவர்களின் சீரிய வரவு.

**எ**ல்லையில் புகழ்சேர் தில்லையம்பதியில், சிவகாமி நாதர் திருவருட் பாங்கால் பொற்சபையதனைப் பொற்புறப்புதுக்கியும், உமையம்மையோடுறை திருமூலட்டானர்க்கு சிற்பநூன் முறையே திருப்பணி செய்தும், அன்ன சத்திரமாதிய வைத்தும், திருக்கருவூரானிலைத் திருத்தலமதனில், கிருபா நாயகி, சௌந்தர்ய நாயகி சமேத பசுபதீச்சுரர் ஆலயப் பணியை அழகுற வமைத்தும் கோயிலூர் மடாலயத்தில் ஞான நூல்கள் பாடம் கேட்டும், சிவபுண்ணிய சீலராய், சற்குணசம்பன்னராய், நடுநிலையுடையராய்ப் பெருமதிப்புடன்பிறங்கியதிருவாளர், சா. ராம. முத்தையசெட்டியாரவர்களின் பெருந்தவப் பயனாக வந்துதித்து கல்வி, அறிவு, ஆற்றலிற்சிறந்து, "வைசியர்க் கழகுவளர்பொருளீட்டல்" என்னும் வாக்கியத்தைக் கைகொண்டு, நிறைபெருஞ் செல்வராய், "அறிவுடையொருவனை அரசனும் விரும்பும்" என்றபடி துரைத்தனத்தார்நன்கு மதித்து, "ராவ்பஹதூர்" "சர்" "டாக்டர்" "ராஜா" என்னும் சிறப்புப் பெயர்களை மென்மேலும் வழங்க பரோபகாரப் பண்பும் வள்ளன்மையும், வருவிருந்தோம்பும் பெருநலவாழ்க்கையும், அயரா முயற்சியுடன் எடுத்த காரியத்தை இனிது முடிக்கும் திற

னும், இன்னுரையால், தண்ணளியால் யாவரையும் தன் வயப்படுத்தும் தன்மையும், வெற்றியே தன்னை நாடிவரும்மேன்மையும் உலகப் பிரசித்தியும், பலவகை நலனும் பெற்று "அண்ணாமலைப் பல்கலைக் கழகம்" ஆதிய அற நிலையங்களைப் பெரும் பொருள் கொடு நிறுவியும், திருச்சிற்றம்பலத்தே மன்றவாணர் திருமுன்றினில் திருச்சித்திரகூட மென்னும் கோவிந்தராஜப் பெருமாள் கோயில் திருப்பணியைச் சீர்பெறச் செய்து முடித்தும், ஏற்ற மிக்குடையராய், புகழுக்கோர் நிலைக்களமாக விளங்கும் கனம் செட்டிநாட்டு ராஜா சர், அண்ணாமலை செட்டியாரவர்கள், பர்மா இந்திய தூதுக்கோஷ்டியின் தலைவராக இங்கிலாந்துக்குச் சென்று பாரீஸ், ஜெர்மனி யாதிய பல நாடுகளிலும் திக்கு விஜயம் செய்து வெற்றியுடன் வைகாசி உகவ காலைபம்பாய் துறைமுகத்தில்வந்திறங்கி உடனே புகைரதமேறி உஉவ செவ்வாய்க்கிழமை மாலை 5-மணிக்கு சென்னை வந்து சேர்ந்தார்கள்.

அவர்களின் மாட்சிமிக்க மனைவியார் ராணி சீதையாச்சி யவர்களும், அருமைத் தனயரான திருவளர் செல்வர் இராமநாதச் செட்டியா ரவர்களும் உடன் வந்தார்கள். புகைரத நிலையத்தில் சென்னையிலிருந்தும், செட்டிமார் நாட்டிலிருந்தும், பர்மாவிலிருந்தும்வந்த தனவணிக நகரத்தார்களும், சென்னைநகரவாசிகள் பலரும் மேயர் குமார ராஜா முதலானவர்களும் மிக்க பேரார்வத்துடன் வந்திருந்து, ராஜா, ராணி, ராஜகுமாரர் ஆகிய மூவரையும் வரவேற்றுப் பொற்சரிகை மாலைகளும், பூமாலைகளும் புனைந்து, முகமன் கூறி அடையாற்றிலுள்ள அவர்களின் அழகிய அரண்மனைக்கு அழைத்து வரலாயினர். அரண்மனைக்கு வந்த நகரத்தார்கள் நல்விருந்தருந்தினர். நற்செய்திகளை வினவினர்; நவின்றனர்.

கனம் ராஜா அவர்கள், ராணியாருடன் இங்கிலாந்தில் சக்கரவர்த்தி தம்பதிகளைப் பேட்டி கண்டும் சக்கரவர்த்தியின் வெள்ளி விழா வைபவத்திற் கலந்தும் பாராட்டப்பெற்றனர்.

பர்மாப்பிரிவினைச்சம்பந்தமாகஎழுந்த கூட்டுக்கமிட்டி அறிக்கை, இந்தியர்களுக்கும், பர்மாவில் இந்தியர்களுக்குள்ள உடைமைகளுக்கும், தீங்குவிளைவிப்பதாயிருந்தமையால் அத்தீங்குகளைபகற்றிகாரிய சித்திபெற்றுவரவேண்டுமெனக்கருதி, பள்ளத்தூர் நகரத்தார்களின் நன்முயற்சியால் கோயிலூர் மடாலயத்தில் அகில தனவைசிய மகாநாட்டின் பிரதிநிதிக் கூட்டம் பவ, மார்கழி ககூவ கூட்டப்பெற்று, தேவகோட்டை ஜமீந்தார் அள. அரு. ராம வெள்ளையப்பசெட்டியாரவர்களின் குமாரர் திருவாளர், சோமநாதன் செட்டியாரவர்கள் தலைமையில் கூடிச் செய்த ஒன்பது தீர்மானங்கள் இதன் 152ம் பக்கத்திலிருந்து விளக்கப்பெற்றுள்ளன. 7-வது தீர்மானப்படி ராஜா அவர்களைத் தலைமையாகக் கொண்ட ஒரு காரிய விசாரணை சபை நிறுவப்பெற்றது. அதன் காரியதரிசியாக பள்ளத்தூர்

186952



திருவாளர், ராவ்பஹதூர், உ. அ. பெரி. மு. அருணாசலம் செட்டியாரவர்கள் நியமிக்கப் பெற்றார்கள். அச்சபையார் பவ தை நூவ கோயிலூர் மடாலயத்தில் கூடியும், அதற்கு முன் பர்மாவிலுள்ள நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கத்தின் அங்கத்தினர்கள் வந்தும் ஒரு தூதுகோஷ்டி நியமனம் செய்து அதற்குத் தலைவராகக் கனம் ராஜா அவர்களைத் தேர்ந்தார்கள். ராஜா அவர்கள் தங்களின் சொந்தச் செலவிலேயே இங்கிலாந்துக்குப் போய்வருவது பெருமையெனக் கருதினமையைச் சபையாரும் உவந்தனர். ராஜா அவர்கள் தமக்குரிய அமைச்சரே போன்று, பள்ளத்தூர், அட்வகேட் மகா-௱-௱-ஸ்ரீ கா. இராமநாதன் செட்டியாரவர்களையும், புதுக்கோட்டை வக்கீல் மகா-௱-௱-ஸ்ரீ நாகசாமி ஐயரவர்களையும் பிறரையும் உடன்கொண்டு சென்று, டில்லியில் கனம், ராஜப்பிரதிநிதியவர்களையும், இங்கிலாந்தில் இந்தியா மந்திரியவர்களையும், பேட்டி கண்டு விண்ணப்பங்கள் செய்துகொண்டார்கள். அதன் மூலம் இங்கிலாந்திலிருந்து பெற்றுவந்த பயன்களாவன:—

(க) கொடுக்கல் வாங்கல்களின் மூலம் பர்மாவில் மிகுதியான நிலங்களைச் சுவாதீனம் செய்துகொள்ள எண்ணங்கொண்டிருப்பது போல, இந்தியர்களும் முக்கியமாகச் செட்டியார்களும் மனம் புண்படுமாறு கூட்டுக் கமிட்டி அறிக்கை 473ல் கூறும் வார்த்தைகள், குறைகூற வேண்டுமென்ற எண்ண மன்னியில் எதிர்பாராமல் நேர்ந்திருக்கிறது என்று இந்தியா மந்திரி ஆறுதல் கூறினர்.

(உ) பார்லிமெண்டு சபையில் உதவி மந்திரி, பட்லர் துரையவர்கள் பர்மாவில் செட்டியார்கள் சங்கம் மிக முக்கியமானது; செட்டியார்கள் பர்மாவுக்குச் சீவாதாரமான சேவை செய்துவருகிறார்கள் எனவும், பட்லர் துரையவர்களும், லார்டு ஷண்டர்டன் துரையவர்களும், பர்மாவின் அபிவிருத்திக்கு பர்மியர்களுடன் நட்புரிமை பாராட்டி உதவி புரிந்தவர்கள் செட்டியார்களே, எனவும் புகழ்ந்து பேசினர்.

(ங) இந்தியர்கள் எப்போதும்போல் பர்மாவிற்கு யாதொரு தடையுமின்றிப் போய்வரவும், தொழிற்றுறை புரியவும் பூரணபாத்தியமுண்டு கூலிவேலைக்காரர் பர்மாவுக்குப் போய்வருவதை மட்டும் அவசியமானால் கட்டுப்படுத்தக் கூடும்.

(ச) விவசாயிகள் தங்கள் நிலங்களை ஈடு, விற்பனை செய்வதானால் தங்களைப்போன்ற விவசாயிகளுக்கே செய்யலாம். இந்தியர்களும் செட்டியார்களும் தங்கள் நிலங்களை ஈடு; விற்பனை செய்வதில் யாதொரு தடையுமில்லை.

(ரு) பர்மா சட்டசபையில் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சங்கத்திற்கு ஒரு ஸ்தானம் உண்டு.

186952

(சு) பர்மாவுக்கு வரும் உரிமை, பர்மாவில் வர்த்தகவுரிமை, கொடுக்கல் வாங்கல் செய்யும் உரிமை, சொத்துக்களின் உரிமை ஆதியவெல்லாம் பிரிட்டிஷ் இந்தியர்களைப்போல, சுதேசசமஸ்தான இந்தியர்களுக்கும் உண்டு.

என்பனவாம். கூட்டுக்கமிட்டி அறிக்கையின்படி, இந்தியர்கள் பர்மாவுக்குப் போய்வரக் கடுமையான நிபந்தனைகள் ஏற்படவும், சொத்துக்களின் உரிமைகள் பறிபடவும் கூடுமோ எனப் பரிபவப் பட்ட நிலைமையில் ஒருவாறு சாந்தியளித்த துரைத்தனத்தார்க்கும் கைமாறு கருதாது, தூது சென்று காரியசித்தியுடன் வந்த தூது கோஷ்டியார்க்கும் பொதுவாக இந்தியர்களும் சிறப்பாகச் செட்டியார்களும் நன்றி பாராட்டும் கடமை பூண்டுள்ளார்கள்.

மேலும் செய்கோனில் கொடுக்கல் வாங்கல் செய்துவரும் செட்டியார்களைப்பற்றி அந்த அரசியலார் பிறப்பித்திருந்த நாடுகடத்தும் உத்தரவை நிவர்த்திக்க கனம் செட்டிநாட்டு ராஜா அவர்கள் பாரிசுக்குச் சென்று பிரான்சு மந்திரிகளைப் பேட்டி கண்டு அவ்விடரையும் ஒழித்து வெற்றியுடன் மீட்சியுற்றார்கள். இதை யாரும் எதிர்பாராத நிலைமையில் ராஜா அவர்கள் நிறைவேற்றி வந்தது பெரிதும் பாராட்டற்பாலது.

நண்பர், மகா-ள-ள-ஸ்ரீ இராமநாதச் செட்டியார் அட்வகேட் மகா-ள-ள-ஸ்ரீ வக்கீல் நாகசாமிஐயர் முதலானவர்களும் அணிமையில் வந்து சேர்வார்கள்.

தூது கோஷ்டியினரின் அரியசேவையை உபகாரச் செயலை அன்புரிமையை இன்புடன் பாராட்ட தனவணிக நகரத்தார்கள் வைகாசி கருஉ கோயிலூர் மடாலயத்தில் கூடிப் பேசித்தீர்மானங்கள் செய்து மூன்று நிர்வாகசபைகளை நியமனம்செய்து மிருக்கிறார்கள்.

கனம் ராஜா அவர்களை காரியவிசாரணை சபைக்காரியதரிசி திருவாளர் ராவ்பஹதூர் அருணாசலம் செட்டியாரவர்கள் கண்டு பேசி ஒரு சௌகரியமான தினம் குறிப்பிட்டுத் தெரிவிப்ப தன்பேரில் கோயிலூரில் கொட்டகை முதலான அலங்காரங்கள் செய்து கனம் ராஜா முதலானவர்களை வரவேற்று தக்கார்தலைமையில் பேரறிஞர்களால் பாராட்டவும் வாழ்த்தவும் நல்விருந்தருத்தவும் பெறும்.

செட்டிநாட்டு ராஜா அவர்களின் சீரிய வரவுக்குச் சிறந்த மகிழ்ச்சியுடன் அவர்கள் பல்லாண்டுவாழத் திருவண்ணாமலையார் திருவருளைப் பிரார்த்திக்கின்றோம்.

——

உ

# மகாராணியாரின் வாக்குறுதி.

ஈஸ்டு இந்தியா கம்பெனியார் கையிற்சிலகாலமிருந்த இந்தியா தேசத்தை 1857ம் வருடம் முதல் ஆட்சி புரியத் தொடங்கியவர் இப்போது நம்மையாளும் அரசரின் பாட்டியாராகிய மகாராணியாரே. அப்போது அவர் இந்தியர்களுக்குச் செய்து கொடுத்த வாக்குறுதியின் ஒரு பகுதி வருமாறு:—

"Firmly revlying ourselves on the truth of Christianity and acknowledging with gratitude..........and we do strictly charge and enjoin all those who may be in authority under us that may abstain from all interference with the religious belief or worship of any of our subjects on pain of our highest displeasure."

இதன் கருத்து, ஆங்கில ஆட்சியார், கோயில்கள் மடங்கள் முதலான சமயவழிபாட்டுக்குரிய இடங்களை மாற்றமாட்டார்கள்; அவைகளை இடிக்கச் செய்யார்கள்; எச்சமயிகளின் வழிபாடுகளையும் தடுக்கமாட்டார்கள்; கீழுத்தியோகத்தர்கள், மாறுபாடு செய்தால் வெறுக்கப்படும். சமயசம்பந்த மனைத்தும் சுதேசமன்னர்களின் ஆட்சிகாலத்திலிருந்தவாறே ஆங்கில ஆட்சியிலும் நடக்கவேண்டும். என்பனவாம்.

இவற்றிற்கு மாறாக பல வேறுசமயத்தவர்கள் சட்டசபைகளிற் புகுந்து தங்களுக்கு அனுகூலமாக மற்றைச் சமயிகளுக்குப் பிரதிகூலமாக இந்து மதாலயச்சட்டம்; ஆலயப்பிரவேசச் சட்டம்; மடாலயச் சட்டம்; கயாச்சட்டம் முதலான கொண்டுவருகின்றனர்.

1857ம் வருடத்தில் எந்த எந்த ஆலயம் எவ்வெவருடைய அதிகாரத்தி லிருந்தனவோ, எந்த எந்த மடங்கள் எவ்வாறிருந்தனவோ அந்தப்படி இருக்கவிடுவதுதான் பெருமாட்டியார் வாக்குறுதியின் கருத்தாகும்.

அந்தக் காலத்தில் வழக்காயிருந்த ஆலயம், மடம் முதலியவற்றை மாத்திரம் தமது தீர்ப்பின்படி நடக்கச் செய்யலாம். ஒரு சமயத்தவருள் எனக்கு எனக்கு என்று சொல்லும் வழக்குகளைத் தீர்க்கலாம். புதிதாய் அமைக்கும் ஆலயங்களை, முன்னுள்ள சமயக் கோயிலாரோடு சண்டையிட்டுக் கொள்ளாதவாறு ஏற்ற தூரத்தில் கட்டச் செய்யலாம்.

இந்தப்படியே நமது ஐந்தாம் சார்ஜ் சக்கரவர்த்தியார் ஆட்சி புரிவாரானால் தமது பாட்டியாரிடத்தில் உண்மையான அன்பை நிலைநாட்டினவராவர். என நல்லூர், திரு, த. கைலாசம் பிள்ளையவர்கள் சுழுகேசரியில் விளக்கியுள்ளார்கள்.

# சிவநேசன் அறிவிப்பு.

நம் சிவநேசன் சைவமும் தமிழும் தழைக்க எட்டாண்டுகளாகத் தொண்டு செய்து வருகின்றான். சிவநேசன் கட்டுரையாளர்களும், வாசகர்களும், சிவநேசச்செல்வர்களும், செந்தமிழ்ச்செல்வர்களுமேயாவர். முதல் ஐந்தாண்டுகள்வரை வாரத்தாளுக்கு, ஆண்டுத்தொகை ரூபா மூன்றாகவும் ஆறாவது ஆண்டுமுதல் திங்கட்டாளாக, ஆண்டுத்தொகை ரூபா இரண்டேகாலாகவும் நியதிசெய்யப்பெற்றன. பலர் ஆண்டுத்தொகை யுதவியும் பலர் இலவசமாகப் பெற்றும் சிவநேசனை ஆதரித்துவருகின்றார்கள். பலர் சிலபல ஆண்டுகளுக்குத்தொகை செலுத்தவேண்டியவர்களாகவும், பலர்தொடக்க முதலே செலுத்த வேண்டியவர்களாகவுமிருக்கின்றார்கள். ஆண்டுத்தொகை வரப்பற்றக் காகித மெழுதின் பலர் கவனிப்பதில்லை. V. P. செய்தால் பலர் திருப்பிவிடுவார்கள். ஆளனுப்பினால் காண்டற்கு அரிதாகும். காணினும் பின்னர் வாங்கிக்கொள்ளலாமென்ற உத்தரவேபிறக்கும். நாமே நேரிற்காணுமிடங்களிலாவது, அவர்கள் வாழ்மனைக்குநாம் செல்லநேருங்காலத்திலாவது,சிவநேசநிலையத்திற்கு அவர்கள் வருங்காலத்திலாவது கேட்பது மரியாதையாகாதெனக் கருதப்படுகிறது. ஆண்டுத் தொகை வரப்பற்றத் தனியே ஒரு மானேசரையும், தண்டல்காரனையும் நேமித்தால் அவர்கட்குச் சம்பளம் நம் கைப் பொறுப்பாவதன்றிக் காரியமில்லை. இத்தியாதி காரணங்களால் பத்தாவது ஆண்டு முதல் மூலதனம் தந்திருப்பவர்கள் முன்பணம்தருபவர்கள், இலவசமாகக்கேட்பவர்கள் ஆகியவர்கட்கு மாத்திரமே அனுப்ப எண்ணுகிறோம்.

நாம் பல வேறு காரியங்களுடன் இதனை உரிய தொண்டாக மேற்கொண்டு நடத்திவருவதைப் பாராட்டி மேலும் ஊக்கமுண்டாகச் செய்ய வேண்டியது சைவமக்களின், தமிழ்மக்களின் கடமையல்லவா? வரும் ஆடி முடிய எட்டாண்டுகள்வரைக்கும் ஆவணியில் தொடங்கும் ஒன்பதாம் ஆண்டுக்கும் சிவநேசனுக்குச் சேரவேண்டியபாக்கித் தொகையைஅன்பர்கள்மனமுவந்துசேர்ப்பித்தால்பேருபகாரமாகக்கருதப்படும். தனித்தனிஒவ்வொருவரும்செலுத்தவேண்டியது சிறுதொகையாகவும் கூடுதலில் சிவநேசனுக்கு பல்லாயிரக் கணக்கான பெருந்தொகையாகவு மிருக்கின்றன. ஆதரிப்போரனைவரும் தனிகர்களே யாதலால் எப்பொழுதும் தருவார்கள்; ஆதரிப்பார்கள்; சிவநேசன் தளராது வளரு மென்னும் நம்பிக்கை யுண்டு.

அன்பர்களே! சைவமும், தமிழும் தழைக்கச் செய்வதுதான் உய்வகையருளும், தெய்வப்பணியும், தேசப்பணியுமா மெய்ப்பதைச் சிந்தித்து மறவாது போற்றுவீர்களாக.



## மதிப்புரை மஞ்சரி.

மதுரமித்திரன்:— சித்திரை மலர் வரப்பெற்றோம். பதின் மூன்று உள்ளுறைகளுடன், காங்கிரஸ்காரர்கள், காங்கிரஸ் தலைவர் ஊர்வலம், காங்கிரஸ் தொண்டர்படை ஆகிய பதினொரு படங்களும் ஒரு சாமியார், இருசெட்டியார்களின் படங்களும் இணைந்துளது. முகப்பில் இதன் ஆசிரியர், திரு, N. சுப்பிரமணியம் அவர்கள் படமும் அறுபதுபக்கங்களும் உள்ள இது தேசப்பணியைச் சிறப்பாகக் கொண்டது. விலை அணா இரண்டு. கிடைக்குமிடம்:— "மதுர மித்திரன்" ஆபீஸ், தெப்பக்குளம் P. O. திருச்சி.

சங்கீர்த்தனக் கும்மியும், நவரசக் கீர்த்தனங்களும்:—கருவூர்த் தென்பால் தான்தோன்றி மலையில் வாழ் ஸ்ரீநிவாசப் பெருமாள் பேரில், கோனுபட்டுவாசி வண்புகழ் நாராயண தாசர் எனும் திரு, அனந்தராம் ஐயங்காரவர்கள் இயற்றி கோநகர், திருவாளர், சு. மு. சு. பழ. முருகப்ப செட்டியாரவர்களின் பொருளுதவியால் பதிப்பிக்கப் பெற்ற புத்தகம் விலை அணா மூன்று.

---

# ஒரு அன்பரின் பிரிவு.

எனது ஆப்த நண்பராய் விளங்கிய கண்டனூர் திருவாளர், தெ. அரு. சித. கரு. இராமநாதச்செட்டியார் கபவாத சுரத்தினால் 2 வாரம் பீடிக்கப்பட்டு வைகாசி அட உதயத்திற்கு முன் இம்மண்ணுலக வாழ்வை நீத்தமைக்கு மிக வருந்துகின்றேன். இவர் நடு நிலைப்பெரியாராகிய திருவாளர், தெ. அரு. சித. அருணாசல ஐயா அவர்களுடன் பிறந்த அருமைத் தம்பி திருவாளர், கருப்பன் செட்டியர்ரவர்களுக்குத்தவப்புதல்வராக, கரவுறு சித்திரைமீ ௯௯௨ வியாழக்கிழமை ஜனித்து தாய்தந்தையர்களால் பாராட்டிப் போற்றி வளர்க்கப்பெற்று, செந்தமிழ்க் கலை பயின்று, சிவநேசம் பூண்டு சீரியராய் வாழ்ந்தவர். அவருடைய 22-வது வயதிலிருந்து இருபது வருட காலம்வரை நண்பு பூண்டிருந்தோம். உள்ளூரில் மணந்த மனையாளை நீத்து இவ்வூரில் மணங்கொண்டு மனையறமாட்சி புரிந்து வந்தார். நானும் நண்பரும் ஒருவரை யொருவர் மறவாமல் மன ஒற்றுமையுடன் நேசம் பூண்டு அனேக நற்காரியங்களில் கலந்து தொண்டாற்றினோம். இவ்வூரிற் பலர் எனக்கு இடர் விளைத்த காலத்தில் எனக்கு உறுதுணையாய் நின்று மணிவாசக சங்க

விழாக்களை மாண்புற நடாத்தினர். பிரதோட விரத மனுட்டித்த ளை தருமையன்னை, குரோதன கார்த்திகை௨௮-ஞாயிற்றுக்கிழமை அபரபக்க பிரதோட புண்ணிய காலத்தில் சிவபதமெய்தும் சமயம், என்னுடனிருந்து திருவாசக மோதினர். அன்றிரவே கானாடுகாத்தானுக்குச் சென்று அடுத்த நாட் காலை, கனம் ராஜா சர் அவர்களை யழைத்து வந்து ஊர்க் கக்ஷியை யொழித்து ஒற்றுமைப்படுத்தினர். பல பல சங்கங்களிலும் என்னுடன் பிரசங்கங்கள் புரிந்தனர். சிவநேசர் திருக்கூட்டங்காணவும், சிவநேசன் பத்திரிகை தொடங்கவும் உறுதுணையாயிருந்தனர். தொண்ணூற்றாறார் கூட்டத்தை நடத்தும் காரியப் பொறுப்பை நகரத்தார் எனக்குத் தந்திருந்த காலத்தில் எனக்கு உதவியாக நின்று கூட்டத்தைச் சிறப்பாக நடத்தினர். கோட்டையூர் நகரத்தார் மன ஒற்றுமையுடன் கூடி சிவாலயத் திருப்பணியை நிறைவேற்ற மேற் கொண்ட பெரு முயற்சிக்குச் சிறந்த துணை புரிந்தனர். நானும் நண்பரும் கூடினால் பேரூக்கமும் பேரெழிலும், பெருஞ்சிறப்பும், பெறலரு மின்பமும், பெருங் காரியசித்தியும் தானே உண்டாவதாயிருந்தன. எங்களின் சேர்க்கையைப் பல அன்பர்களும், பெரியார்களும் பாராட்டினர். எங்களின் நட்பின் சிறப்பைக் கண்டுபொறாத சிலரின் மித்திரபேதத்தால் நண்பர் என்மீது இரண்டு வருடகாலமாக மனத்தாப முடையவரா யிருந்தாராயினும் ஒருவரை யொருவர் மறவாத நேயப்பான்மை யிருந்தே வந்தது. அவர்களின் திருக்கண்ணூர் கோயில் கும்பாபிஷேக சமயத்தில் மனத்தாபம் தீருமென்பதற்கேது விருந்தது. திருப்பணி நிறைவேறி மகா கும்பாபிடேகத்திற்காவன பவ தை௨௯௳ முதல் சித்தம் செய்யப்பெறுகின்றன. அவர்களின் பெரிய தகப்பனாரவர்கள் கட்டளைப்படி காரியம் பார்க்க ஆங்கு சென்றிருந்த நண்பர் ஆனி௴ ௨௪௳ மகா கும்பாபிஷேகத்தை நடத்தவும், காணவும் உரியராயிருந்தும் விதி வசத்தால் தம்மூர்வந்துசிவகதி சேர்ந்தனர். திருஞானசம்பந்தப்பெருமானார் மீது வருகைப் பதிகம் பாடித் துதித்துப் பேரன்பராய் விளங்கினராகலின் அவரது திருநாள் இவரது சிவகதிக்கு உரியதாயிற்று. இவரது பேர் விளங்கவும் சந்ததி தழைக்கவும், பிள்ளை கூட்டிக் கல்யாணம் செய்து வைக்க இவர்கள் பால் மிக்க அன்புடைய இவர்களின் பெரிய தந்தையார் உறுதி கொண்டுள்ளார்கள். எனக்குப் பின்னிருந்து என்னைப் பாராட்டுவரெனக் கருதியிருந்தேன். தெய்வ சம்மதம் இப்படியாயிற்று. ஒழுக்கத்தை உயிரினும் சிறந்ததாகப் போற்றி சிவவேடப் பொலிவுடன் திகழ்ந்த சிவநேசச் செல்வராகிய அன்பரின் ஆன்மா சிவபெருமான் திருவடி நீழலிற் கலந்து இன்புறுவதாகுக.

---

உ

## ஆளுடைய அடிகள்

# அருண்மொழி யுவமை.

(வித்வான் திரு. ச. சேதுசுப்பிரமணிய பிள்ளை யவர்கள், சிதம்பரம்.)

இப் பத்திரிகையின் தகுதிக்கேற்றபடி எதனை எழுதலாம் என்று ஆராய்ந்து பார்க்கையில் சிற்றின்பம் அளிக்குஞ் சிறிய உவமைகளைப் படித்துப் பெரிய உவமைகளாப் பிறழ உணர்ந்து நம்மவர்கள் அவ்வுவமையில் மயங்கிக் கிடத்தலானும், சிறிய உவமைகளைச் சீரிய உவமைகளாக மயங்கிக் கிடக்கும் வரையில் அம் மயக்க உணர்ச்சிக்குக் காரணமாகிய அறியாமை நம்மைவிட்டு நீங்காமையின் நாம் அரிய பெரிய உண்மை உவமைகளின் நிலையை உணர்ந்தாலல்லாமல் இப்பிறவித் துன்பத்தைப் போக்குத லாகாமையானும் இவ்வுவமையே யெழுதுவது இன்றியமையாததாகத் தோன்றியது.

பிறவியை ஒழிக்கும் முயற்சிக்கு ஏதுவாகிய நூல்களைக் கற்று அவற்றின்படி ஒழுகாவிடின் நாம் அடைந்த பிறவியின் நோக்கம் வெற்றேற கழிவதாகும், நூலைக்கற்று அதன்படி ஒழுகியவரே பிறவியின் பயனை அடைந்தோராவர்.

"எழுத்தறியத் தீரு மிழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகு—மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்"

என்றவெண்பா வினால் முதல் நூற் பொருளுணர்ந்த நல்லோரே முறையே பிறவிப் பெருங்கடலை நீந்தி இறைவனது இணைத்தாளை அடைவர் என்பது பெறப்பட்டது.

நமக்கு அரிதிற் கிடைத்திருக்கும் மக்கட் பிறவியின் நோக்கம் கொன்னே கழிந்துவிடுமாயின் நாம் நமக்கும் அயலவர்க்கும் ஆராத துன்பத்தைக் கொடுத்தோ மாவோம். ஆதலின், அவிச்சையாகிய இருள் நீக்கமும் அறிவாகிய விளக்கம் பெறுதலுமே இப்பிறவி எடுத்ததின் பயனாய்க் காணப்படுதலின் அவிச்சையாகிய இருளைக் களைந்து அறிவாகிய விளக்கம் அடைதற்குரிய உண்மைநூல்களை ஓதியுணர்ந்து அவற்றிற் காணும் கருத்துக்களைத் தெள்ளிவடித்து அறிந்து அதன்படி ஒழுகவேண்டும் என்பதுபற்றி ஆளுடையஅடி

கள் அருண்மொழியுவமை என்றபொருளை இம்மாத சஞ்சிகையில் எழுதத்துணிந்தேன்.

ஆளுடையஅடிகள் என்றது ஸ்ரீமன் மணிவாசகப்பெருமானை. அப்பெருமான் செய்த அருண்மொழியாகிய திருவாசகசகத் திருக்கோவையார்களில் சொல்லாற் பொருட்கிடனாக வருகின்ற உவமையணியின் சிறப்புக்கள் மற்றெவரானுங் கூறப்படாத பெருஞ்சிறப்பின என்பது கற்றோருங் கேட்டோரும் அறிவர்கள். திருவாசகத்தின் ஆரம்பத்தில் நாற்றத்தினேரியாய் கறந்தபால்கன்னலொடு நெய்கலந்தாற்போல சிறந்தடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று என்பன முதலாக நாய் சிவிகை யேற்றுவித்த என அச்சோப் பதிகம் இறுதியில் கூறியஉவமை முடிவாக எத்தனையோ அரிய பெரிய நுண்ணிய சிறந்த பொருளமைதிவாய்ந்த உவமை அணிகள் உள்ளன.

அவையிற்றை யெல்லாம் ஒரேசமயத்திலறிந்து எழுதி வெளியிடுதல் இயலாததாம். ஆதலின் இது சமயம் திருவெம்பாவைத் திருப்பாசுரம் ஒன்றன்வாயிலாகச் சுவாமிகள் அருளுகின்ற ஓர் அருண்மொழியை எழுதி அவற்றிலுள்ள உவமைகளின் நயங்களைக் காண்பதே கருத்தாகும்.

வெண்டளையால் வந்த
இயற்றரவிணைக் கோச்சகக்கலிப்பா.

“முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை யாளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்.”

இவ் வருண்மொழிப்பாடல் அமைந்த திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் தனக்குவமையில்லாத் தாண்டவமாடும் பெருமானே நேரிற்றோன்றி இப்பாடலைக் கேட்டுமகிழ்ந்ததுடன் தம்திருக்கரங்களால் எழுதினர் என்று பெரியார் கூறுவரெனின் இதனது பெருமையையாவர் அளவிடற்பாலர்.

1907-ம் ஆண்டில் காலம்சென்ற கிருஸ்துவ மதத்தினராகிய போப் என்பவர் இத்திருவாசகத்தைத் தமிழிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து ஆங்கிலமக்கள் உணரும்படி செய்தனர்.



இவ்வாசகத்தேனைப் பலமுறைபடித்தும் கேட்டும் பயின்றதனால் இறந்தபிறகு எனக்கு அமைக்கப்படுங் கல்லறையில் என்னைத் தமிழ் மாணவன் எனப் பொறிக்கவேண்டும் என்று அருகிருந்தாரை அயல்மதக் கொள்கையையுடைய அவர் விரும்புவரெனின் இத்தமிழ் நூலைவிரும்பாதார்யாவர். ஒருவாற்றானும்தனக்கொப்புமையில்லாத திருவுருவம் போன்றது இந்நூல். இந்நூற்கு உவமை கூறின் வேதம் ஒன்றே கூறலாம். வேதத்தையும் இவ்வாசகத்தையும் கற்பனைக் கடலாகிய சிவப்பிரகாசர் எடுத்துக்கொண்டு வேதம்பலகால் ஓதினும் அதனைக் கேட்போர் நெஞ்சுநெகிழ்ந்து கண்ணீர் பெருக்கி நிற்பவரையாம் எங்கும் கண்டிலேம். இவ்வாசகத்தை ஒருகால் ஓதின் கருங்கல் மனமும் கசிந்து விழிநீர்பெருக்கிச் செயலற்று நிற்பார் என்று வேதத்தை நிந்தையுவமையாக் கூறுவர். ஆதலின் உவமை முகத்தானும் பிறநூல்களினும் இந்நூலே இணையற்றது என்பது வெள்ளிடை மலைபோலும்.

இச்செய்யுள் மழையை அஃதாவது மேகத்தை முன்னிலையாக வைத்துப் பரமேஸ்வரனுடைய திருக்கருணையின் திருவடிவத்தைச் சிந்திக்குமாறு அருளுகிறது. வெண்ணிறம் வாய்ந்தமேகமே நீ கடலை அடைந்து அதனைக்குறைத்துவிண்ணிலெழுந்து எம்மையாளாக வுடைய இறைவியின் திருவுருவம்போலப் பச்சைநிறம் வாய்ந்து அவ்விறைவியின் நுண்ணிய இடைபோல் மின்னிப் பொலிவுற்று எம்பெருமாட்டியினது திருவடியின் மேலணிந்த நாதச்சிலம்புபோல முழங்கி அவ்விறைவியின் திருப்புருவங்கள்போல இந்திரவில் விளங்கச் செய்து, வில்லோடு விளங்கி நந்தம்மை ஆளுடைய பெருமாட்டியோடு சமவேதமாய் அஃதாவது நீக்கமறஇருக்கும் எம்பெருமானது அடியார்களுக்குள் திருவுளம்பற்றிச் சிந்தித்தருளி எமக்கு ஆட்படுந்தன்மை யுண்டாவதற்கு முன்னரே அப்பெருமாட்டி, சுரந்தருளுகின்ற இனியகருணை மிகுதிபோல நீயும் மழையைப் பெய்வாயாக என்பதாம். கடலைச் சுருக்குதலாவது அந்நீரைமுகந்து அதனைக் குறைத்தல் “நெடுங்கடலுந் தன்னீர்மைகுன்றும் தடிந்தெழிலிதானல்காதாகிவிடின்” என்ற வான்சிறப்புத் திருக்குறளில் தடிந்தெழிலிதானல் காதாகிவிடின் என் புழித்தடிந்து என்பதற்குக் குறைத்து என்று ஆசிரியர்பரி மேலழகியாரும் உரைஉரைத்தனர். “கடல்குறைபடுத்தநீர்கல்குறை படவெறிந்து” எனப்பரிபாடலிலும் கடல்குறைத்தல் கூறப்படுகின்றது.

இட்டிடைஎன்புழி இட்டுஎன்பது சிறுமையை உணர்த்திநின்றது. ஆகாறள விட்டிதாயினும் என்றகுறளுரையானும் தெரியலாம்.

சிலைகுலவி யென்பது சிலையொடு விளங்கி எனப்பொருள் கொள்ளின் உடனிகழ்ச்சிப் பொருளையுணர்த்தும் மூன்றாவது விரி

யும் சிலைகுலவிவித்து எனப்பொருள் கொள்ளின் குலவிஎன்புழிக் குடி பொன்றிக்குற்றமு மாங்கேதரும் என்ற குறளிற்போல வில்விகுதி தொக்குநின்றது.

நம்தம்மை ஆளுடையாள் தன்னிற் பிரிவிலா எங்கோமான் என்றது சத்தியும் சிவனும் நீக்கமின்றி இயைந்துநிற்கும் குணகுணிகள் என்பது விளக்கியவாறு.

எங்கோமான் அன்பர்க்கு என்புழிக் குவ்வுருபு கிழங்கு மணலின்கண் ஈன்றமுளை எனற்பாலது கிழங்கு மணற்கீன்றமுளை என வந்தாற்போல ஏழன் உருபின் பொருள் படநின்றது. எங்கோமான் அன்பர் பலருள்ளும் அடியேங்களை முன்னி அவள் நமக்குச் சுரக்கும் இன்னருள் எனப் பொருள்கொள்ளப் படுதலால் அவ்வேழனுருபு கூட்டிப் பிரித்தற்கண்,

"இயல்பினு னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை" என்புழிப்போலவந்தது.

இதனை இந்நூலாசிரியரே மற்றோரிடத்தில்,

"அன்ப ராகிமற் றருந்தவம் முயல்வார்
அயனும் மாலுமற் றழலுறு மெழுகாம்
என்ப ராய்நினை வார் எனைப்பலர்
நிற்க இங்கெனை எற்றினுக் காண்டாய்,

எனக் கூறியுள்ளார். முன்சுரக்கும் என்புழி "முன்என்னை ஆள்வாழ் உடையான்" என்ற திருக்கோவையாரில் முன் என்பதற்கு எனக்கு ஆட்படுந்தன்மை உண்டாவதற்குமுன் எனக்கூறிய பேராசிரியர் உரையானும் தெளியலாம். இச்செய்யுட்குப் பிறர்பிறவாறும் உரை வகுப்பர். அவையெல்லாம் மிகையென்று கருதிவிடுத்தனம். இனி இச்செய்யுளில் வந்த உவமையைப் பற்றிஆராய்வாம்.

---

# செய்ந் நன்றி யறிதல்.

(கண்டாச்சிபுரம் திரு, அ. முத்தையப் பிள்ளை அவர்கள்.)

மக்கட் பிறவி வாய்க்கப் பெற்றோரெவர்க்கும் தத்தம் வாழ்நாட்க ளிடையே இன்ப துன்பங்கள் மாறி மாறி நிகழ்கின்றன. அவசியம் நேர்ந்தபோது ஒருவர் மற்றொருவரின் உதவியை வேண்டுதல் இயல்பு. ஒருவர்க் கொருவர் உதவுவதே நன்றியாம். நன்றி, செய்யாமற் செய்தல், காலத்திற்செய்தல், பயன்றூக்காது செய்தல் எனமூவகை. பிறருதவி செய்யாதிருக்கத் தான் செய்வது, ஆபத்துச் சமையத்தில் தாழ்க்காது செய்தல், பின்னல் நமக்கிவருதவுவ ரென



வெண்ணாது (எதிர்பாராது) செய்தல் ஆம். இதன் பெருமையை தெய்வப் புலவர் முறையே, "செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்வானகமும் மாற்றல் அரிது" "காலத்தினாற் செய்தநன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது" "பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கின் நன்மை கடலிற் பெரிது" எனவிளக்கியுள்ளார். நன்றிசிறிதாயினும் பெரியோர் மிகப் பெரிதாகக் கொண்டு மகிழ்வர்; என்றும்மறவார். அற்பர்கள் (அறிவிலிகள்) நீர்மேலெழுதிய வெழுத்தின் மறப்பர்.

"ஒருநன்றி செய்தவர்க் கொன்றி யெழுந்த
பிழைநூறுஞ் சான்றோர் பொறுப்பர்—கயவர்க்
கெழுநூறு நன்றிசெய் தொன்றுதீ தாயி
னெழுநூறுந் தீதாய் விடும்".

என்றபடி கயவர்கள் குற்றம் பாராட்டுபவராதலின் அவர்க்குச் செய்த நன்றியை மறந்து தீது கைக்கொள்வர். ஆதலின் அவர்கட்குபகாரம் செய்தலினும் செய்யாமலிருப்பது மேல். நெருப்பில் விழுந்தேளை விழாதபடி காப்பாற்றுவோனை அத்தேள் கொடுக்கினால் கொட்டித் துன்பமுண்டாக்கும் என்றும்

"வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி
ஆங்கதனுக் காகார மானாற்போல்—பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த வுபகாரம்
கல்லின் மேலிட்ட கலம்"

என்றும் பெரியோர் மொழிந்தவை ஈண்டு நோக்கத்தக்கன.

இனி, "உப்பிட்ட பேர்கள் தமை யுளவரையு நினைக்கு மிந்த வுலகந்தானே" என்பதுபோல் நன்றியை உயிருள்ள வரை மறத்தலாகாது. இதனை நம் ஔவை மூதாட்டியார் "நன்றி மறவேல்" எனச் சுருக்கமாக விளக்கி யுரைத்துள்ளனர்.

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று"

என்ற பொய்யா மொழியார் வாக்குப்படி நன்றியை மறத்தலாகாது. தீமையை உடனே மறத்தல் அறம்.

வரையாதளிக்கும் வள்ளன்மையிற் சிறந்த கன்னன், துரியோதனன் தனக்குச் செய்தநன்றியை மறவாதவனாய், பாண்டவர்களைத் தனது தம்பிய ரென்றறிந்தும் துரியோதனனது பெருமையை,

"ஆறென்றறியத் தகாதவெனை யரசுமாக்கி முடிசூட்டி
சீருந்திறமுந் தனதுபெருந் திருவுமெனக்கே தெரிந்தளித்தான்

பாரின்றறிய நூற்றுவர்க்கும் பழிதீர்வென்றிப் பாண்டவர்க்கும்
போரென்றறிந்தும் செய்ந்நன்றி போற்றுதவிற் போவேனோ"

இன்னுமொன்றறிதற் கியலாத வென்னை ஒரு தேசாதிபதியாக்கித் தன் சீர் முதலிய எல்லாச் செல்வங்களையும் அளித்து உதவிய துரியோதனனுக்கும் குற்றமற்ற பாண்டவர்களுக்கும் யுத்தம் நேரிட்டதறிந்தும் பாண்டவர்கள் பக்கல் சேர்ந்து செய்ந்நன்றி போற்றுதார் செல்லும் தீயநரகிற் சேர்வனோ? சேரேன் எனக் கண்ணபிரானிடம் விளக்கிக் கூறுகின்றான்.

பின்னும், தன்னைப் பாண்டவர்கள் பக்கஞ் சேரும்படி வற்புறுத்திக் கூறிய குந்திக்கும், "தாயே! நீர் என்னைப் பெற்ற காலத்தில் என்பால் அன்பில்லாமையினாலோ, பழி நாணியோ பேழையில் விடுத்தீர். அற்றைநாட் டொடங்கி என்னை யின்றளவும் ஆருயிர்த் துணை யெனக் கருதிக் கொற்றமா மகுடம் புனைந்து அரசளித்துக் கூடவுண்டு உரிய தம்பியரும் சுற்றமானவரும் என் அடி வணங்கத் தோற்றமு மேற்றமு மளித்த துரியோதனனுக்குத் துணையாய்ச் செருமுனை சென்று செஞ்சோற்றுக் கடன் கழிப்பனே தவிர, என்னுயிரிழப்பினும் செய்ந்நன்றி மறந்து நீர் கூறியபடி பாண்டவர்கள் பாற் சேரமாட்டேன். இதுவே எனக்குப் பெருமையும் தருமமும் ஆகும் எனக்கூறி அவ்விதமே போர்முகஞ் சென்று புயங்ககேதனனுக்குத் துணையாய் எதிரிகளோடு போர் புரிந்து புகழுடம்பு பெற்றான்.

இனி, செய்ந்நன்றி மறத்தல் எல்லாப் பாவங்களுக்கும் முதன்மையானது. மற்றபாவங்கள் மகளிர் கருவழித்தல் முதலியனபோல் எத்தகைய கொடியதாயினும் அதற்கு உய்யுந்திறனுண்டாம். செய்ந்நன்றி கொன்றார்க்கு ஈடேறும் மார்க்கமில்லை. இதனை,

"அரவமல்கிய பதாகையாய் மதியமைச்சரா யரசழிப்பினும்
குரவர்நல்லுரை மறுக்கினும் பிறர்புரிந்தநன்றியது கொல்லினும்
ஒருவர்வாழ் மனையிலுண்டு பின்னுமவருடனழன்று பொரவுன்னி
இரவியுள்ளளவு மதியமுள்ளளவு மிவர்களை நரகிலெய்துவார்"[னும்

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்பவற்றா லறியக் கிடக்கின்றது. சூரிய சந்திரர்கள் அழியாது என்று முள்ளவராதலின் இப்பாவஞ் செய்தோரும் நரகினின்று நீங்காது என்றும் வருந்துவர் என்பது தோன்ற "இரவியுள்ளளவு மதிய முள்ளளவும்" எனக் கவி உவமை கூறுவராயினர்.

யாதானு மொருநன்றி செய்தார் மாட்டு அந்நன்றியை மறவாதிருத்தலோடு அவர்க்கு மனமொழி மெய்களாலும் கெடுதி செய்யா



திருத்தல்வேண்டும். அவர்கள் மனம் வருந்தும்படியான எச்செய்கையையும் செய்யலாகாது. அங்ஙனஞ் செய்வாராயின் முன் செய்த நன்றியே இவர்களை யழிக்கும் கூற்றாம். சூரபதுமன் தனது குமாரன் இரணியன் என்பவனை வீரவாகு தேவர்பால் போர்க்குச் செல்லும்படி கூற இரணியன் "தந்தையே! நீர் அழியாதசரீரத்தையும் அகண்ட சாம்ராச்சியத்தையும் எங்கிருந்து பெற்றீர்? இவ்வரத்தை நல்கியவன் யார்? கொடுக்க வல்லவன் அதனை எடுக்க வல்லனல்லனோ? நினக்கு அவ்வரம் அருளியவனே ஈண்டு போர்க்கெழுந்தருளியுள்ளான் அமரர் சிறையகற்றி யவனடி சேர்ந்தால் மகிழ்ந்து அருளுவன். இன்றேல் நாமிறப்பது சரதம்,

"ஒன்றொரு பயன்றனை யுதவினோர் மனம்
கன்றிட வொருவினை கருதிச் செய்வரேல்
புன்றொழி லவர்க்குமுன் புரிந்த நன்றியே
கொன்றிடு மல்லது கூற்றும் வேண்டுமோ"

என்றதனைக் கேளாததால் சூரபதுமன் கிளையோடு மாண்டான். இதனால் நன்றி செய்தாரது மனம் வருந்தத் தக்க காரியத்தைச் செய்யலாகாது எனத் தெளிந்து நன்றிமறவாமையைக் கடைப் பிடித்தல் சிறப்பாம்.

——

## உயர்ந்தோர் கூறும் உறுதி மொழிகள்.

இமைப் பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க.

பாச அடவிக்குள்ளே செல்லாதவர்க்கு அருள் பழுத்து ஒழுகு தேவதருவே.

குறை குற்றம் இல்லாத தராசுகள்தான் பண்டங்களின் நிறையை உள்ளவாறு நிறுத்தெடுக்கும். அதுபோன்று ஓரஞ்சாராத மனம், நடுநிலை பிறழாத அறிவு உண்மையை உள்ளவாறு ஓர்கிறது.

அறநெறி வழுவாதிருப்பது அரிதல்ல; வழுவியவன் மீண்டும் தன்னை ஒழுங்குபடுத்திக்கொள்ளுதலே அரிதிலும் அரிது.

ஒருவன் சாதித்த செய்கையைப் பற்றி மனிதன் பெருமை பாராட்டுகிறான். ஆனால் கடவுள் ஒருவனது நோக்கத்தையே ஊடுருவிப் பார்க்கிறார்.

நீ ஆற்றும் வினையின் பயன் என்னவாயினும் சரி. நீ வெற்றி பெறுவதும் தோல்வி யுறுவதும் உன் கைவசமில்லை. ஆனால் வினையாற்றுதலில் நீ கொள்ளும் உத்தேசம் என்ன; எத்தகைய ஊக்கத்துடனும் மகிழ்வுடனும் நீ தொண்டு புரிகிறாய்; எவ்வித உற்சாகத்துடன் நீ கீழ்ப்படிகிறாய்; இவைகளே கொள்ளப்படும்.

…ஷ்ண விஜயம்.

186952

உ

# சுயராஜ்ஜியம்.

(திருவல்லிக்கேணி, திரு. நல். கண்ணப்ப முதலியாரவர்கள்.)

சில பல ஆண்டுகளாக சுயராஜ்ஜியம் என்ற கிளர்ச்சியாண்டும் தாண்டவமாடுகின்றது. அன்னியப் பொருள்களை யகற்றினால் சுயராஜ்ஜியம் சித்திக்கும் என்பது இதன் தலையாய நோக்கம். வாய்ப்பறையடிப்பதைத் தவிரச் செயலிற் காட்டுவாரிலர்.

அன்னியபாஷை கற்றல், அதையே, பேசுதல், எழுதுதல், அன்னிய தேசத்தாரைப்போல உடையணிதல், தலைமயிர் கத்தரித்துக் கொள்ளுதல், மீசையைக் குறுக்கி முக்கால், அரை, காலாக வைத்துக்கொள்ளுதல், கொழுப்பு,எண்ணெய்முதலியவைகளாற்செய்த(சோப்)சவக்காரக்கட்டிகளை யுவத்தல், நடுவீடுவரை செருப்புப்போட்டு நடத்தல், உணவுகளைக் கரண்டி கொண்டுஉண்ணுக்குவரைவைத்துண்ணுதல், மேடையிலுண்டல், அன்னிய பதார்த்தமென்னும் புலால்புசித்தல், அன்னிய மாதரைநயத்தல், உணர்வை யழிக்கும் பானகவகைளைப்பருகுதல், நெட்டுத்தட்டைகள் மூலம் உறிஞ்சுதல், பிறர் உண்டபருகிய எச்சல் பாத்திரங்களை உபயோகித்தல், ஆங்கில பாடசாலைகளில் ஆண்டுதோறும் மாறும் புத்தகங்களுக்குப் பணம் போட்டு பரிக்ஷைக்குப் பணம் கட்டிப்படிக்க உடைமைகள், விளைநிலம், வீடுகளையும் விற்றுக் கற்றபின் வேலைகிடைக்குமா என்று விண்ணப்பங்கள் எழுதிக் கிடைப்பதரிதாகித் திண்டாடித் தெருவூடலைதல், ஆதியதீமை பொருந்திய அன்னிய தேசாசாரப் பழக்க வழக்கங்களை அன்னிய பாஷா மோகத்தை யறவே யொழித்துத் தேனினுமினிய தேசபாஷையைத் தீவிரமாகக் கற்றல் அதையே பேசுதல், எழுதுதல், நம் நாட்டு முறைப்படி உடையணிதல், உண்டல், பருகல் ஆகிய பண்டைய பழக்க வழக்கங்கள் நழுவாமல் போற்றுதல், தெய்வத்தினிடத்தும் பெரியோரிடத்தும் மெய் நம்பிக்கையுடன் வழிபாடு செய்தல் ஆகிய நன்மைகளைக் கடைப்பிடித்துவரின் சுயராஜ்ஜிம் கைவரப் பெறலாம்.

சுத்தமான உணவு, உடை, உறையுள் சுகிர்தமான பழக்க வழக்கம் சுயமான பாஷை ஆகியவைகளைப் பெறுதலே சிறந்த சுயராஜ்ஜியம்.

தேச பாஷையைச் சிறப்பாகக் கற்காமலும், தேசாசாரங்களைப் போற்றாமலும், தேசத்தில் வழங்கும் வருஷம், மாதம், கிழமை, திதி, நாள் ஆகியவைகளைக் கூட அறியாமலும் விருதாவிற் காலத்தைக்கழித்து விட்டு, தேசபக்தர்கள், தேச ஊழியர்கள், தேச விடுதலைக்குப் பாடுபடுபவர்கள் என்றெல்லாம் படாடோபமாக ஆரவாரித்துக்கொண்டு, பார்ப்பனரதியோருடன் பறையரைச் சமப்படுத்தினால் சுயராஜ்ஜியம் சித்தித்துவிடு மென்று பறையடிப்பதாற் பயனென்னை? அப்படிச் சமப்படுத்தவும் முடியாது. சாதியாசாரங்கள் ஒழிந்தாலும் சுயராஜ்ஜியம் சித்திப்பதற்கில்லை. தேசபக்தி, தேச பாஷையிற்பக்தி, தேசாசாரங்களில் பக்தி, தெய்வபக்தி ஆகியவைகள் சித்தித்து குரோத புத்தி நீங்கி மன நிறைவுடன் மக்களின் ஒற்றுமை மேலிடுங்காலமே சுயராஜ்ஜியம் சித்திக்கும் நற்காலம்.

உ

# பொய்யாமொழிப் புலவர் சரிதவிபரீதம்.

யுவ௵ வைகாசி௴ வெளிவந்த ‘சிவநேசன்’ 239-வது பக்கத்தில், திரு, மு. சுந்தரவடிவேலன் அவர்களால் வரைந்து வெளியிடப்பட்ட "பழந்தமிழ்ப் புலவர் வரலாறு" என்னும் வசனத் தொடர்பு கண்டாம்.

அதன் தோற்றுவாய்ப் பகுதியிற் சில புலவர்களைத் தொகுத்துக் காட்டி, "இவர்கள் சிறப்படைந்தோராவர்" என்று குறித்துள்ளதை நோக்க ஏனைய புலவர் அத்துணைச் சிறப்பில்லாரென்ற அர்த்தாபத்திக்கிட முண்டாகின்றது. அன்றியும் அவர்கள் சரிதம் அழுக்காறுடையோரால் திரித்தெழுதப்பட்டு மங்கி யழியாவாறு தாம் தக்கசான்றுடன் துலக்குமாறு முன் வந்துள்ளதாயும் குறித்துளார்.

குறிக்கப்பட்ட புலவரெழுவரும் செங்குந்த குலத்தின ரெனக் காட்டி வணக்கங் கூறிய கவியொன்று முகப்பி லமைக்கப்பட்டது. அஃது எந்நாலி லுள்ளதெனக் குறிக்கப்படவில்லை. எஃதாயினுமாக. அவ்வசனத்துக்குச் செங்குந்தப் புலவர் வரலாறென்று துலக்கமான பெயரிட்டிருக்கலாம். அதை விடுத்துப் பொதுவகையாற் கரந்து கூற வேண்டாவாம்.

பொய்யா மொழிப் புலவர் சரிதக் குறிப்பைக் கூறிய கவி முடிவிற் "செங்குந்த சிலாக்கியரே" என முடித்த மாலைநூல் ஆசிரியரும் செங்குந்தரே யாவர் போலும்.

முருகன் பாலைவனத்திற் புலவரிடம் வேட வடிவுடன் சந்தித்து, "அப்புலவரை இன்றோரென் றறிந்து" பாடல் கேட்டனரென்றதால் அதற்கு முன் அறிந்திலாமையாகிய விபரீதம் முருகனுக்குச் சித்திக்கின்றது. பின் புலவர் கூறிய கவிப்பொருளை மறுத்து முருகன் அவர்மீதொரு கவிகூறி உண்மைக்காட்சியளித்த போது, புலவர் அப்பெருமானை வணங்கினர்; துதித்தனர்; மனமகிழ்ந்தார் என்பதொன்று மின்றி விடுத்து முருகன் புலவரது நாவில் வலிந்து தனது வேலினால் எழுதிச் சென்றாரென்று உபசரித்துள்ளது அப்புலவர் பெருமையை எவ்வளவு நன்றாய்த் துலக்குகின்றதென்பதை அறிஞர்களுணர்வர்.

முருகனது வேல் புலவரது நாவில் எழுதுதற் கேற்ற சிற்றுளியினதாயினு மாகட்டும், அதைக்கொண்டு அவர் என்ன எழுதினர் என்பது விளக்கியதில்லை.

புலவர், பிரமசரியரா, கிரஹஸ்தரா என்பதைப் பற்றிய விவரம் தெரிந்தால் நண்பர் அதனைத்தமது வியாசத்தி லெழுதாதிரார் என்பதொருதலை.

கானப்பேர் நகரிற் கூத்தா ளென்னுங் கணிகையின் வீட்டுக்குப் புலவர் சென்று கவிபாடிக் குருடு மாற்றியும் இன்னும் பல

கணிகையர்களுக்குப் பாடி அவர்களாற் பொற் பரிசு பெற்றும் வாழ்ந்திருந்து பின், மதுரைக்குச் செல்லும்போது அந்தப் பெருந்தொகைப் பொருளை யென்செய்தா ரென்பது தெரியவில்லை.

மதுரையில் பாண்டியனைக் கண்டு சங்கம் நிறுவக் கருதிய புலவர் அதைவிட்டு அவனது மந்திரியைக் கோவைப்பனுவல் கூறித் துதித்து அவனாற் பெருந்தொகைத் தியாகம் பெற்று, அதன்பின் பாண்டியனைக் கண்டபோது அவன் மீது ஒரு கவியேனும் கூறாது தனது கருத்தை யெடுத்துரைத்தா ரென்னின் அவரது நட்பத்தை யாவர்தான் வியவாதிருக்க முடியும்.

புலவர் முதலின் மந்திரியின்மீது பெரும்பனுவல்பாடி அவனாற் பரிசு பெற்ற விஷயம் அரசனறிந்திருப்பானன்றோ? அறிந்தானாயின் அவனுக்குப் புலவர் மீதுரிமையுண்டாவ தெப்படிக் கூடும்? பின் அரசன் சொன்ன சவதப்படி புலவர்பாடிச் சங்கத்தார் வடிவங்கள் சிரம் அசைப்பித்தனர்; அது கண்ட அரசன் சங்கப்பலகை மிதக்கும்படி செய்விக்குமாறு வேண்ட அதையும் செய்து காட்டினர் புலவ ரென்றார் நண்பர். அந்தக் கவியையும் எழுதாமல் விட்டது ஏனோ அறிகிலம்.

அதன் பிறகு அரசன் றுணையாற் சங்கம் நிறுவிப் பன்னாள் புலமை நடாத்தியிருந்த புலவர் அந்நிலை நீங்கிப் பலவூர் சுற்றத் துவக்கியதற்குக் காரணங் குறியாமல் எக்காரணம் பற்றியோ நீங்கினெனப் பொதுவாக விட்டது நன்றே.

கணிகையரளித்த கனகக் குவியலும், வாணனளித்த பொற்றேங்காய்களும் இருக்கப் புலவர், போதிய பரிசனர் காப்புடன் செல்லாது சீநக்கன் வீட்டுக்குப் பசியிளைப்புடன் செல்ல நேர்ந்த கொடுவினைதா னென்னே?

அவனளித்த புளிச்சோறுண்டு பாடல் கூறி உறவாயிருந்த புலவர் சோழனிடம் சீநக்கன் மூலமாகப் பொருட் பரிசு பெற்றதாகக் குறித்தது வறுமையை யுணர்த்துவதன்றி அவரது புலமையாற்றலை விளக்கவில்லை.

சீநக்கனது வீட்டிற் புலவர் பகிரங்கமான இடத்தில் அமர்ந்துரையாடாமல், இரவிற் பளிக்கறைக் கட்டிலில் அவனுடனமர்ந்து பேசினர்; பின் அவனை உணவுக் கனுப்பியவுடனாவது தான் வெளியே வந்து வேறிடத்திலிராமல் அக்கட்டிலிலேயே தன்னை மறந்து படுத்துறங்கினர்; உண்ட சீநக்கன் புலவரை விடுத்து வெளியே உலாவச் சென்றான் என்னும் விஷயம் உலகியலறிவுக்கு முற்றும் இழுக்காகும். சீநக்கனதுமனைவி, கட்டிலில்உறங்குபவர்யாவரென்று ஆராயாமல் உடன் றுயின்றாளென்பது அவ்வம்மையாருக்கு அறியாமையையும், அவ்வீட்டுக்குத் தீபவெளிச்ச மின்மை போன்ற நல்குரவு நிலையையும் விளக்கின்றது.



பின் சீநக்கனது பிணம் வேகும் சிதையழலில் புலவர் வீழ்ந்திறந்தன ரென்னும் பழியுரையானது, கேட்கும் அன்பர்கள் புலவர்களது மனத்தைத் துன்பக்கடலுள் ஆழ்த்துகின்றதன்றோ? சகல கல்வியு முணர்ந்தது மன்றி முருகன் வேலால் நாவிலெழுதப் பெற்ற அவர் தேகாதிப்பொருள்கள் அநித்தியமென்னும் உணர்ச்சியநுபவமும் கூட இன்றி அவமாக வுடம்பை நீத்தனரென்றது அவரது தகுதியை எவ்வளவு துலக்குகின்றது பாருங்கள்.

பிறவிக் குருடிகளான வேசியர்கள் பலருக்குக் கண்ணொளி விளங்கவும், மதுரைத் தடாகத்தி லமிழ்ந்து மறைந்த சங்கப் பலகை பலரறிய மிதக்கவும் பாடிப் பலிதங் கண்ட வாக்கினால் அவனைப் புலவர் மீள வெழுப்பியு மிருக்கலாம்; அஃதில்லாவிடினும் தானிறவாமல் வாழ்ந்து பின் இயல்பான மரணமடைந்திருக்கலாமே என்பது கொள்கை.

ஆயின் இவ்வித வரலாறு வரையத் துணிந்த வடிவேலர் தம் கோளாக வரைந்திலர்; வேறு சில நூற்கோள் கண்ட வுணர்வினால் வரைந்ததாகக் காட்டியுள்ளார். இத்தகைய விவரங்களை வேறு சிலர் அழுக்காற்றால் திரித்தும் குறைத்தும் எழுதினரென்று பூர்வபக்ஷம் பண்ணத் துணிந்தது நமது நண்பரது இழுக்காறே போலும்.

புலவரும் உண்மை ஒழுக்கம் நிரம்பியவர்; சீநக்கனும் நீங்காவுரிமைபூண்டவன்; அவன் மனைவியும் கற்பொழுக்கம் நிறைந்தவளானபோது இம்மூவரிடை நள்ளிரவில் நடந்த நிகழ்ச்சி அடுத்த நாளில் ஊர் முழுவதும் பரவி நிந்தை பயக்க நேர்ந்த தெவ்வாற்றால் என்பதொரு மலைவாகும். இதுவரையில் எழுதியது அவ்வசனத்திலுள்ள விபரீதத்தைக் குறித்ததே யன்றிச் சிறிதும் நண்பர்மீது அழுக்காறு கொண்டன்று.

## சித்தாந்தம்.

பாண்டி நாட்டிற் பொய்யாமொழி யென்னும் ஊரிற் பிறந்ததாலும், சத்தியத்தன்மையினாலும் அப்பெயர் வாய்க்கப் பெற்றவர் அப்புலவரென்றும், தமிழ்ப் புலமை மிக்குப் பல கவிகள் பலர்மீது பாடிப் பரிசில் பெற்று வாழ்ந்திருந்தனரென்றும், அவர் கனவில் முருகன் றோன்றிக் கவிகூறுமாறு பன்முறை கேட்டு மிணங்காது மறுத்து வந்தன ரென்றும், ஒரு நாள் புலவர் தஞ்சை நகரத்தில் வாழ்ந்தவாணனென்னும் செல்வன் மீது கோவை நூல் பாடித் துதித்து அவன் மகிழ்ந்து பொற்றேங்காய்கள் வழங்கப்பெற்று வரும்போது பலரும் அவரிடம்யாசித் ததால் புலவர் தமக்கென்று சிறிதும் வைக்காமல் அவற்றை நல்கினர் என்றும், பின் வேறொரு சிறுபதியிற் பெற்ற கம்புடன் பாலையின் வழிச் செல்கையில் முருகன் வேடவடிவுடன் வந்துரையாடிக் கவிகேட்டுத் தானும் பாடிக் காட்சி வழங்கி அருள் புரிந்து மறைந்தனர் என்றும், பின்னர்

வீடு சென்றிரண்டொரு தினம் வசிக்கையில் அவரது மனைவி "ஏதோவொரு பெரும் பயன் பெற்றுள்ளீர் உமது முகத்தெளிவி னாலுணர்கின்றேன் அஃதியாது" எனப் புலவர் மதுரைக்குப்போய் வந்து சொல்வேனென்றுரைத்து அங்குச் சென்று பாண்டியனை ஆலயத்துக்கேகும் வழியிற் சந்தித்து "முருகனருள்பெற்ற புலவன் யான் என்னை நீ அறியக் கடவாய்" எனவே அவன் முன் னிருந்தசங்கப் புலவருக்கிணையாவாயோ என்றலும் அப்போது ஆலயத்துள் அப்புலவரெதிர் சென்று இவர், ஒருவெண்பாவால் வினவ அவ்வுருவங்கள் தலையசைத்தன என்றும் அதுகண்ட அரசன் அஞ்சி வணங்காது மந்த குணத்தால் இஃதொரு சாலமென்று வாளா இருப்பக் கண்ட புலவர் சிறு சினங்கொண்டு பொற்று மரைக் குளத்தருகு வந்து அரசனை நிறுத்தி திருவருட் சிந்தையுடன் தமது வாயினால்,

"பூவேந்தர் முன்போற் புரப்பவர்க ளில்லையென்றும்
பாவேந்த ருண்டென்னும் பான்மைதான்—மாவேந்தன்
மாறனறிய மதுரா புரித்தமி ழோர்
வீறணையே சற்றே மித".

என்னும் கவிகூறலும் பலருங் காண அஃது மிதந்தது; அரசன் அடிபணிந்து வேண்டும் உபசாரங்க ளனைத்தும் இயற்றி, சகல செல் வங்களும் புலவரது வீட்டில் ஏவலாளர் வழியே நிறைவித்து, புல வரை வாகனத்தி லேற்றியனுப்பினன் என்றும், வீட்டில் வந்து மனைவியுடன் பல்லறங்களும் நடத்தி மகிழ்ச்சியுடன் பன்னாள் வாழ்ந்து சண்முகப் பெருமானது பதவியில் முத்தியுற்றனரென் றும் புலவர் புராணம் கூறுகின்றது.

"வேண்டுகின்றபல் செல்வமும் புலவன்றன் வெறுமனை யிடஞ்சேர்த்திட்
டாண்டுவாகனத் தவனையு முய்த்தன னங்ஙனஞ் செய்யாம
லீண்டுமெய்ப்புகழ் வாணனிற் கொடுத்திடி லேற்பவர்க ளுக்கீந்திட்
டியாண்டுகம்பு கேழ்வரகளிப் பவருளா ரெனமுன்போற் றிரிவானே
கனகமாதிய மிகைபட மனையினிற் காண்டலும் புலவோன்ற
னனகபத்தினி கனவுகொலோ விதென் றையமுற்றன ளன்னோன்
பனகபூடணன் விழிதரு சேயருட்பயனெனச் சொலத்தேறி
யினநல்வாழ்வு மிப்பிறப்பினிற் பெறும்விதி யிருந்ததென் றளிகூர்ந்தாள்"
அன்னவாழ்வயின் றறம்பல பெருக்கி மற்றையரிட மலைந்தேற்கு
மின்னன்முற் றொழிந்திருவரு மொருமனத்தின ரெனவுலகோது
நன்னலம் பொறுத் தறுமுகக் குருபர னட்டுறு கதிசேர்ந்தார்
சொன்ன பாடலின்படி யரசரினலோர் தோற்றறிதாயிற்றே"
(புலவர் புராணம்)

"பாலையிற்போய் மூட்டையின்மேற் படித்தானைப் போற்றி" என்று கௌமாரத் தொகைப் பதிகத்தில் இவரைத் துதித்துள்ளார் ஸ்ரீ தண்டபாணி சுவாகள்.

ஓர் கௌமாரன்.



வேக மாய பயமும் விருப்பும்போய்
மாகர் காணாச் சுகத்தை மருவுவான்.

(இ - ள்.) யோகியாகி ஒழுகும் இயல்பினோன் - சிவயோகியாய்ச் சஞ்சரிக்கும் இயல்பினை உடைய ஞானசாதகன், பொருள்மேல் புலன்களை போகமாற்றி - உலகப் பொருள்களினிடத்து இந்திரியங்களைச் செல்ல வொட்டாது தடுத்து, வேகம் ஆய பயமும் வியப்பும் போய் - உற்பாதத் தாலுண்டாகும் அச்சமும் அதிசயமுமின்றி, மாகர் காணா சுகத்தை மருவு வான் - தேவர்களுங் காணமுடியாத பேரின்பத்தை அடைவன் எ - று.

(பொ - ரை.) சிவயோகியாய்ச் சஞ்சரிக்கும் இயல்பினையுடைய ஞான சாதகன், உலகப்பொருள்களினிடத்து இந்திரியங்களைச்செல்லவொட்டாது தடுத்து, உற்பாதத்தாலுண்டாகும் அச்சமும் அதிசயமுமின்றி, தேவர்களுங் காணமுடியாத பேரின்பத்தை அடைவன் எ - று.

(க - ரை.) ஞானசாதகன், இந்திரியங்களை அடக்கி, உற்பாதத்தால் அச்சமும் அதிசயமுமின்றிப் பேரின்பத்தை அநுபவித்துக்கொண்டிருப்பன் என்பதாம்.

புலன்கள் - அறியும் இந்திரியங்களைக் குறித்தன.

போக என்பது இந்திரியத்தின் அடக்கத்தையும், மாற்றி என்பது மனத்தின் அடக்கத்தையும் குறித்தவாறாம். மனத்தின்கண் ஆசையறுதலா லுண்டாகும் இந்திரிய அடக்கமே அடக்கமெனச் சிறப்பித்துக் கூறப்படும். ¶ பொருந்தணைமேல் வருர்பயனை போக மாற்றி என்றதும் இக்கருத்துப் பற்றியேயாம்.

வேகம் - பின்விளையுங் கேட்டிற்கு முன்னறிவிப்பின்றி விரைவில் தோன்றும் உற்பாதத்தைக் குறித்தது. பூகம்பம் முதலியன அச்சந்தருவன சந்திர சூரியர்கள் நக்ஷத்திரங்களின் தோற்றத்தில் மாறுதல் அதிசயத்தைத் தருவன. † எங்கெழிலென் ஞாயிறெமக்கேலோ ரெம்பாவாய். என்றதும் இக்கருத்துப் பற்றியது. (௧௦)

(அ - கை.) சகல வுயிர்களையுந் தன்னைப் போலக் கருதி, புகழ்ச்சி இகழ்ச்சிகளில் சமபுத்தி உடையவன், இதுகாறுங் கூறிய ஞானசாரத்தை உடையன் என முடித்துக்காட்டுகின்றார்.

61. தனக்கினிய னும்வகையே சராசரங்க ளனைத்தினையும்
நினைத்திகழ்வார் புகழ்வார்பா லொத்திருக்கு நீர்மையினை

¶ அப்பர் தேவாரம். சிதம்பரம்.
† திருவாசகம். திருவெம்பாவை.

மனத்துடைய னவன் யாம்முரைத்த வாசாரம்
அனைத்துடைய னகவறி வெறியமரு மைம்பாலாய்.

(இ - ள்.) வெறி அமரும் ஐம்பாலாய் - வாசனை தங்கிய ஐந்துவகையாக முடிக்கப்படுங்கூந்தலைஉடையவளே! தனக்குஇனியன் ஆம்வகையே - தனக்கு இன்பத்தை விரும்புபவனாக இருத்தல் போலவே, சர அசரங்கள் அனைத்தினையும் நினைத்து - சஞ்சரிக்கும் உயிர்கள் சஞ்சரிக்காது நிற்கும் தாவர வுயிர்கள் அனைத்தினையும் இன்பத்தை விரும்புவனவாக நினைத்து, இகழ்வார் புகழ்வார்பால் ஒத்து இருக்கும் நீர்மையினை மனத்து உடையன் ஆன அவன் - இகழ்பவரிடத்தும் புகழ்பவரிடத்தும் வெறுப்பும் விருப்புமின்றியிருக்குந் தன்மையினை மனத்தின்கண் உடையவன் எவனோ அத்தகைய அவன், யாம் உரைத்த ஆசாரம் அனைத்து உடையனாக அறி - யாம் இதுகாறுங் கூறிய ஞானசாரம் அனைத்தும் உடையவனாக அறிந்து கொள்வாய் எ - று.

(பொ - ரை.) வாசனை தங்கிய ஐந்து வகையாக முடிக்கப்படுங் கூந்தலைஉடையவளே! தனக்குஇன்பத்தை விரும்புபவனாக இருத்தல்போலவே, சஞ்சரிக்கும் உயிர்கள் சஞ்சரிக்காது நிற்குந் தாவர வுயிர்கள் அனைத்தினையும் இன்பத்தை விரும்புவனவாக நினைத்து, இகழ்பவரிடத்தும் புகழ்பவரிடத்தும் வெறுப்பும் விருப்புமின்றி யிருக்குந்தன்மையினை மனத்தின்கண் உடையவன் எவனோ, அத்தகைய அவன், யாம் இதுகாறுங் கூறிய ஞானசாரம் அனைத்தும் உடையவனாக அறிந்துகொள்வாய் எ - று.

(க - ரை.) எல்லாவுயிர்களிடத்தும் கருணையும் புகழ்பவர் இகழ்பவரிடத்துச் சமபுத்தியும் உடையவன் ஞானசாரம் அனைத்தும் உடையவன் என்பதாம்.

இதுகாறுங் கூறப்பட்ட ஞானசாரம் அனைத்தும் இவ்விரண்டனுள் அடங்குமென்பது கருத்து.

ஐம்பால் - ஐந்துவகையாக முடிக்கப்படுங் கூந்தல். அவையாவன:— குழல், கொண்டை, சுருள், பனிச்சை, முடி என்பன. அவற்றுள்,

குழல் - சுருட்டி முடித்தல்.

கொண்டை - ஒரு பக்கமாகச் செருகி முடித்தல்.

சுருள் - நேராகப் பின் பக்கத்தில் செருகி முடித்தல்.

பனிச்சை - பின்னிமுடித்தல். இது, சடையென வழங்கும்.

முடி - உச்சியின் முடித்தல். இது, ஸ்நான காலத்தும் ஸ்நான முடிந்த சமயத்தும் உபயோகிக்கப்படும். (௬௧)



(அ - கை) ஞானசாதகன், தர்க்கம் முதலிய வியாபாரங்களைச் செய்யான் எனக் கூறுகின்றார்.

62. வாதுரைபயனில் சொல்லும் பிறருடன் மகிழ்ந்திருத்தல்
பேதுறு பிணக்கநீங்கிப் பெரியவ னருளினாலே
ஓதுநா லோதலோவி யுலகினினன்று தீதென்
றாதியி லுரைத்த வெல்லா மறவிட்டே யமர்ந்திருப்பான்.

(இ - ள்.) அருளினாலே பெரியவன் - சிவோகம்பாவனை செய்து சிவனருளைப் பெற்றமையால் மேம்பட்டு விளங்கும் பெருமையினை உடையவன், உலகினில் - உலகத்தில், வாது உரை - தர்க்கம் செய்தலும், பயன் இல் சொல் உம் - பயனில்லாத சொற்களைச் சொல்லுதலும், பிறர் உடன் மகிழ்ந்து இருத்தல் - பிறருடன் சிநேகமாயிருத்தலும், பேதுறு பிணக்கம் நீங்கி - மாறுபட்டுப் பகைத்தலும் இன்றி, ஓது நூல் ஓதல் ஓவி - விதி விலக்குகளைக் கூறும் நூல் ஓதுதலையும் விட்டு, ஆதியில் நன்று தீதென்று உரைத்த எல்லாம் அறவிட்டு - இடைப்பட்டதின்றிப் பிரவாக அநாதியாயுள்ள நன்மை தீமையென்று சொல்லப்பட்ட கன்மம் அனைத்தையும் ஒருசேர விட்டு, அமர்ந்து இருப்பான் - அடங்கியிருப்பன் எ - று.

(பொ - ரை.) சிவோகம்பாவனை செய்து சிவனருளைப் பெற்றமையால் மேம்பட்டு விளங்கும் பெருமையினை உடையவன், உலகத்தில் தர்க்கம் செய்தலும், பயனில்லாத சொற்களைச்சொல்லுதலும், பிறருடன் சிநேகமாயிருத்தலும், மாறுபட்டுப் பகைத்தலும் இன்றி, விதி விலக்குகளைக் கூறும் நூலோதுதலையும் விட்டு. இடைப்பட்டதின்றிப் பிரவாக அநாதியாயுள்ள நன்மை தீமையென்று சொல்லப்பட்ட கன்மம் அனைத்தையும் ஒருசேர விட்டு அடங்கியிருப்பன் எ - று.

(க - ரை.) சிவனருளைப் பெற்றவன், உலக சம்பந்தமான செயல்களொன்றுமின்றி அடங்கியிருப்பன் என்பதாம்.

நூலோதல் சிறந்தமையாதலின், வாதுரைமுதலியவற்றை நீக்கியென வேறு பிரித்தார். ¶ "ஞான நூல்தனை யோதல் ஓதுவித்தல் நற்பொருளைக் கேட்பித்தல் தான் கேட்டல் நன்றா ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும் இறைவனடி யடைவிக்கும் எழில்ஞான பூசை" யாதலின், இங்கே ஓது நூல் என்றது விதிவிலக்குகளைக் கூறும் நூலையெனக் கொள்க.

ஆதி - இடைப்பட்டது. ஆதியில்லாதது அநாதி. நன்மை தீமை அனைத்தும் முற்பிற்பாடு தெரியப்படாமை பற்றிப் பிரவாக அநாதியெனப்படும். இவற்றிற்குக் காரணமான மூலகன்மம் அநாதியெனப்படும். நன்மை தீமை என்பன சஞ்சித கன்மம். செயல் ஆகாமிய கன்மம். இன்பத் துன்ப

¶ சிவஞான சித்தியார். ௮-ம். ௯-ம் செ. ௨௬.

அநுபவம் பிராரத்த கன்மம் 0 "தன்மமோ டதன்மமாகித் தானிருபயனுந் தந்து - நன்மை தீமையினு மின்பத் துன்பினுநாடிக் காண - முன்னமே யான்மாவின்றன் மும்மலத் தொன்றதாகிக் - கன்மமுமூலங் காட்டிக் காமிய மலமாய் நிற்கும்". என்னுந் திருவிருத்தம் இக்கருத்தினை நன்கு விளக்கும்.

அமர்தல் - அடங்குதல். (சுஉ)

(அ - கை.) ஞானசாதகன் நீக்கத்தக்ககுற்றங்களைத் தொகுத்துக் கூறுகின்றார்.

63. ஆசை கோபம் பயஞ்சோக ராகமாம்
மாசு மாட்சியுள் ளோராக்க மாற்றமை
பேசு தீமை பிறர்க்குத் தமக்கிலாத்
தேசி ழுக்குடன் றீர்வார் சிறந்தவர்.

(இ - ள்.) ஆசை - கிடையாத பொருளினிடத்து ஆசையும், கோபம் - ஆசை தடைப்பட்ட விடத்து நிகழுங்கோபமும், பயம் - ஆசைப்படும் பொருளுடையார் அறியின் என் செய்வரோ என்னும் அச்சமும், சோகம் - அச்சங்காரணமாக நிகழும் துக்கமும், மாட்சியுள்ளோர் ஆக்கம் ஆற்றமை - பெருமையுடையாரது செல்வங்கண்டு பொறாமை அடைதலும், பிறர்க்கு தீமை பேசு(தல்) - பிறருக்குக் கேடு உண்டாகும்படி பேசுதலும், தமக்கு இலாதேசு ராகம் ஆம் மாசு - தமக்குப் பொருந்தாத கீர்த்தியை விரும்புதலாகிய சிறுமையும், இழுக்கு - (ஆகிய இவை உடைமை) ஞான ஒழுக்கத்திற் றவறுதலாகும், உடன் தீர்வார் சிறந்தவர் - (இவை வாசனை பற்றித் தோன்றுமாயின்) தோன்றினவுடனே நீக்குபவர் ஞானவொழுக்கத்திற் சிறந்தவராவர் எ - று.

(பொ - ரை.) கிடையாத பொருளினிடத்து ஆசையும், ஆசைதடைப்பட்ட விடத்து நிகழுங்கோபமும், ஆசைப்படும் பொருளுடையார் அறியின் என் செய்வரோ என்னும் அச்சமும், அச்சங்காரணமாக நிகழும் துக்கமும் பெருமை யுடையாரது செல்வங்கண்டு பொறாமை அடைதலும், பிறருக்குக் கேடு உண்டாகும்படி பேசுதலும், தமக்குப் பொருந்தாத கீர்த்தியை விரும்புதலாகிய சிறுமையும் ஆகிய இவை உடைமை ஞான ஒழுக்கத்திற் றவறுதலாகும். இவை, வாசனை பற்றித் தோன்றுமாயின், தோன்றினவுடனே நீக்குபவர் ஞான ஒழுக்கத்திற் சிறந்தவராவர் எ - று.

0 சிவஞான சித்தியார். உ-ம் சூ-ம். செ. ௬௧.



(க - ரை.) ஆசை முதலிய குற்றங்கள் தோன்றுதவாறு தடுப்பவரே ஞான ஒழுக்கத்திற் சிறந்தவர் என்பதாம்.

தமக்கில்லாத் தேசு ராகமாம் மாசு எனக் கூட்டிப் பொருள் கொள்க. (சுஙு)

(அ - கை.) ஞானசாதகருக்கு ஞானம் விளங்கித் தோன்றினும் வினை காரணமாகப் போகத்தில் இச்சை யுண்டாகு மெனக் கூறுகின்றார்.

64. பொருண்முழுதும் விட்டுடம்பு பொருந்துஞ்சார் வறப்போவார்
இருளறுஞா னம்விளங்கி யெப்பொருளு மறிவாராய்
இருவினைவீ டறிவாலே யிடர்பிறவென் றறிந்தாலும்
மருளதுறும் போகத்து மனம்வைப்பர் சாதகர்தாம்.

(இ - ள்.) சாதகர் - ஞானசாதகர், உடம்பு பொருந்தும் பொருள் முழுதும் விட்டு - சரீர சம்பந்தமான பொருள்கள் அனைத்தையும் நீக்கி, சார்வுஅற போவார் - பற்று முற்றும்நீங்கினவராவர், இருள் அறும் ஞானம் விளங்கி எப்பொருளும் அறிவார் - மல மற்ற சிவஞானம் விளங்கிப் பொருள்களனைத்தையும் (அதுவதுவாய் நின்று ஒருசேர) அறிபவராவர், பிற இடர் என்று அறிந்தாலும் - இவர் சிவஞானமல்லாத பாசஞான பசு ஞானங்கள் துன்பந் தருவன என்று அறிந்திருப்பினும், ஆய் இருவினை வீடு அறிவாலே - ஆராய்ந்தறியப்படும் இருவினைசெலுத்தும்அந்த ஞானங்களால், மருளது உறும் போகத்து மனம் வைப்பர் - அறியாமையை உண்டு பண்ணும் போகத்தினிடத்துப் பற்று வைப்பர் எ - று.

(பொ - ரை.) ஞானசாதகர், சரீர சம்பந்தமான பொருள்களனைத்தையும் நீக்கிப் பற்று முற்றும் நீங்கினவராவர்; மலமற்ற சிவஞானம் விளங்கிப் பொருள்களனைத்தையும் அதுவதுவாய் நின்று ஒரு சேர அறிபவராவர். இவர், சிவஞானமல்லாத பாச ஞான பசு ஞானங்கள் துன்பந் தருவன என்று அறிந்திருப்பினும், இருவினை செலுத்தும் அந்த ஞானங்களால், அறியாமையை உண்டு பண்ணும் போகத்தினிடத்துப் பற்றுவைப்பர் எ - று.

(க - ரை.) சிவஞானம் விளங்கப்பெற்ற ஞானசாதகன், வினையால் செலுத்தப்பட்டுப் போகத்தில் பற்று வைப்பன் என்பதாம்.

சார்வு - பற்று.

போதல் - நீங்குதல்.

இருள் - மலம். இருளறும்ஞானம் - சிவஞானம்.

ஆய்இருவினை - ஆராய்ந்தறியப்படும் இருவினை. தனக்கு விருப்பமில்லாத பாசஞான பசு ஞானங்கள் தன்னிடத்துத் தோன்றுமாயின், அத்

தோற்றத்திற்குக் காரணம் வினையேயாம். அவ்வினை உண்டென்பது காட்சி யளவையால் பெறப்படாதாயினும், செலுத்தப்படுங் காரியம் பற்றிக் கருதலளவையால் பெறப்படுமாதலின், ஆய் இருவினை யென்றார்.

வீடு - விடு என்பதன் விகாரம். செலுத்துதலென்னும் பொருள் குறித்தது.

இடர் தருவனவற்றை இடர் என்றார்.

மருளது என்றவிடத்து அது, பகுதிப் பொருள் விகுதி.

மனம் - மனத்தில் நிகழும் பற்றைக் குறித்தது.

ஈற்றிலுள்ளதாம் - அசை.

பொருள்கள் அனைத்தும்உயிராலும்சிவனாலும் அறியப்படும். உயிரால் அறியப்படுங்காலத்துஉயிர்உடம்பாய்நிற்கப்பாசஞானபசுஞானங்களால் தன் பொருட்டு ஒவ்வொன்றாகச் சுட்டி அறியப்படும். இவ்வாறு அறியப்படுங் காலத்து அவ்வறிவு பொருள்களின் வேறாய் நின்று ஒவ்வொன்றினுங் கட்டுப் பட்டுத்துன்பத்துக்கேதுவாம். ஆதலின், அப்பாச ஞானபசுஞானங்கள்நீங்க வேண்டு மென்னுங் கருத்துப் பற்றிப் பொருள் முழுதும் விட்டு என்றார்.

சிவனால் அறியப்படுங்காலத்துச் சிவஞானத்தால் தன்பொருட்டன்றி உயிர்களின் பொருட்டுக் கன்மத்துக்குத் தக்கவாறு அவ்வுயிர்களுக்குக் கூட்டுவித்தல் காரணமாக அறியப்படும். இவ்வாறு அறியப்படுங்காலத்து அவ்வறிவு, பொருள்களோடு கலந்து அதுவதுவாய் நின்று அறியும். ஆதலின், இந்தச் சிவஞானத்தைப் பெறவேண்டு மென்னுங் கருத்துப் பற்றி, இருளறும் ஞானம் விளங்கி எப்பொருளு மறிவார் என்றார். (௬௪)

(அ - கை.) சிவஞானம் உடையவருக்குச் சித்தியனைத்தும்வருமெனக் கூறுகின்றார்.

65. விட்டு மேலாம் பதத்தினை மேவுவோர்க்
கட்ட மாசித்தி வந்துறும் வாராதேல்
கட்ட மான கதியைக் கடந்தவர்
எட்டி டாமுத்தி தன்னையே யெய்வரால்.

(இ - ள்.) விட்டு - பற்றுக்கள் அனைத்தையும் விட்டு, மேலாம் பதத்தினை மேவுவோர்க்கு - சிவனோடு பிரிப்பின்றி நிற்கும் மேலான நிலையை விரும்பும் ஞானசாதகருக்கு, அட்டமாசித்தி வந்துறும் - எட்டுப் பெரிய சித்திகளும் தாமேவந்துபொருந்தும், வாராதேல் - அச்சித்திகள் வரவில்லையாயின், கட்டமானகதியைகடந்து - (அவற்றின்பயனுயுள்ள)பிறந்துஇறந்து உழலுந் துன்பமான பிரமபத முதலியவற்றை அடையாது, அவர் - அந்த ஞான சாதகர், எட்டிடா முத்தி தன்னை யெய்வர் - பாசஞான பசுஞானங்களால் அடையப்படாத பரமுத்தியினையே அடைவர் எ - று



(பொ - ரை.) பற்றுக்கள் அனைத்தையும் விட்டுச் சிவனோடு பிரிப்பின்றி நிற்கும் மேலான நிலையை விரும்பும் ஞான சாதகருக்கு, எட்டுப் பெரிய சித்திகளும் தாமே வந்து பொருந்தும். அச்சித்திகள் வரவில்லையாயின், அவற்றின் பயனுயுள்ள பிறந்து இறந்து உழலுந் துன்பமான பிரமபத முதலியவற்றை அடையாது, அந்த ஞானசாதகர், பாசஞான பசு ஞானங்களால் அடையப்படாத பரமுத்தியினையே அடைவர் எ - று.

(க - ரை.) ஞானசாதகருக்கு அணிமா முதலிய சித்திகளனைத்தும் தாமே வரும். வரவில்லையாயின், அவற்றின் பயனாகிய பதமுத்திகளை அடையாது பரமுத்தியினையே அவர் அடைவர் என்பதாம்.

விட்டு என்பதற்கு பற்றுக்கள் என்னும் செயப்படு பொருள் வருவித்து உரைக்க.

மேலாம் பதம் - சிவசாயுச்சியம்.

அட்டசித்தி யென்னாது அட்டமா சித்தி யென்றமையால், அது இருவகைப்படு மென்று அறிவித்தவாறாயிற்று. மாரணம், வசியம் முதலியன அட்டசித்தி யெனப்படும். இவை அட்ட கர்மம் எனவும் வழங்கப்படும். அணிமா முதலியன அட்டமாசித்தி யெனப்படும். இவை, ஞானசாதகருக்குத் தாமேவரும் என்பது * "எம்மை யுணர்ந்த யோகியர்களிவற்றை விரும்பா ரெனினுமவர் - தம்மை நிழல்போலடைந் துலகர்க்கனையார் பெருமை தனை யுணர்த்தும்" என்பதனாலும், பிரமபத முதலியவற்றையே தருமென்பது ‡ "அட்டகுண மெட்டுச் சித்தி கோகநதன் முதல் வாழ்வு குலவுபத மெல்லாம் வெறுத்து" என்பதனாலும் அறியப்படும். சித்தியாரில் அட்டகுணம் என்பது அட்ட கர்மத்தைக் குறித்தது.

முத்தி தன்னையே என்றவிடத்து தன் - அசை. ஏகாரம் பத முத்தி யடையா ரெனப் பிரித்தமையின் பிரிநிலை.

ஈற்றிலுள்ள ஆல் அசை. (௬௫)

(அ - கை.) உடம்பும் உலகும் சிவமெனக் காண்பவனே என்னைக் கண்டவனாவன் எனக் கூறுகின்றார்.

66. ஐவகைய பூதகா ரியமென்னு மவ்வுடம்பில்
மெய்வகையாஞ் சிவனிற்குஞ் சிவமுதலா மேதினியீ
றிவ்வகைய வுலகங்க ளனைத்தினையு மிறையுருவென்
றுய்வகையா வுணர்ந்தானே யெமையுணர்ந்தா னுமைகேணீ.

---

* பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல். அட்டமாசித்தி யுபதேசித்த படலம். செ. உஅ.

‡ சிவஞானசித்தியார் கூ-ம் சூ-ம். செ. கூ.

(இ - ள்.) உமை நீ கேள் - பார்வதியே நீ கேட்பாயாக, ஐவகைய பூத காரியம் என்னும் அவ்வுடம்பில் - பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் என்னும் ஐந்துவகையான பூதங்களின் காரியம் எனப்படும் அந்தத் தூல வுடம்பில், மெய்வகையாம் சிவன் நிற்கும் - உண்மைப் பொருளின் இனமாகிய சிவன் நிலைபெற்று விளங்குவன். (ஆகையால்) சிவம்முதல் மேதினி ஈறாம் இவ்வகைய உலகங்கள் அனைத்தினையும் - சிவதத்துவம் முதல் பிருதிவிதத்துவம் முடிவாக ஒவ்வொரு தத்துவத்திலுமுள்ள இவ்வாறு பல வேறு வகைப்படும் உலகங்கள் அனைத்தையும், இறை உரு என்று - சிவனுடைய திருமேனியென்று, உணர்ந்தானே உய்வகையா எமைஉணர்ந்தான் - அறிந்தவனே பிறப்பு இறப்புக்களில் நின்று விலகும் முறையாக எம்மை அறிந்தவனாவன் எ - று.

(பொ - ரை.) பார்வதியே நீ கேட்பாயாக. பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் என்னும் ஐந்துவகையான பூதங்களின் காரியமெனப்படும் அந்தத் தூல வுடம்பில் உண்மைப் பொருளின் இனமாகிய சிவன் நிலைபெற்று விளங்குவன். ஆகையால், சிவ தத்துவம் முதல் பிருதிவிதத்துவம் முடிவாக ஒவ்வொரு தத்துவத்திலுமுள்ள இவ்வாறு பல வேறு வகைப்படும் உலகங்கள் அனைத்தையும் சிவனுடைய திருமேனி யென்று அறிந்தவனே, பிறப்பு இறப்புக்களில் நின்று விலகும் முறையாக எம்மை அறிந்தவனாவன் எ - று.

(க - ரை.) உலகங்கள் அனைத்தும் சிவனுக்குத் திருமேனியெனக் காண்பவன், சிவனை யறிந்தவனாய்ப் பிறப்பு இறப்புக்களில் நின்று நீங்கினவனாவன் என்பதாம்.

அகரம், பஞ்ச பூதங்களின் காரியமான தூலவுடம்பைச் சுட்டிற்று.

மெய்வகை யாம் என்ற விடத்து வகை - இனம்.

உடம்பில் இருக்கும் நித்தப் பொருளாகிய உயிருக்கு இனமாய் விளங்குவது சிவமாதலின், உடம்பில் மெய்வகையாம் சிவன் நிற்கும் என்றார். உடம்பு அழியுந் தன்மை யுடையது. ஆகையால், உயிரோடு கூடி என்றும் நிற்பதாக ஒருடம்பும் இல்லை யென்பது பெறப்படும். இக்கருத்துப்பற்றியே † "புக்கி லமைந்தின்று கொல்லோ வுடம்பினுட், டுச்சி லிருந்த வுயிர்க்கு" என்றனர் தேவர். உயிர் அவ்வாறழிவதின்றி நித்தமாயிருக்கும். இக்கருத்துப் பற்றியே * மன்னுயிர் என்றனர். அன்றியும் உடல் சடப்பொருள். உயிர் சித்துப்பொருள். ஆகவே, அழிதற் றன்மை பற்றியும் சடத்தன்மை

† திருக்குறள். நிலையாமை. செ. ௧௰.
* ஷை அருளுடைமை. செ. ௪.



பற்றியும் பிரிதல் பற்றியும் உடம்பு, உயிருக்கு இனமாகாதென்பதும், நித்தத் தன்மைபற்றியும் சித்துத் தன்மைப்பற்றியும் பிரிப்பின்றி நிற்றல் பற்றியும் சிவம், உயிருக்கு இனமாகு மென்பதும் பெறப்படுமாறு காண்க. சிவம் உயிரோடு பிரிப்பின்றி நிற்கு மென்பது பற்றியே, ¶ சார்புணர்ந்து என்றனர் தேவர்.

சிவம் - சிவதத்துவம்.

மேதினி - பிருதிவிதத்துவம்.

சிவ முதலிய தத்துவங்களிலிருக்கும் உலகங்கள் என்று கூறவேண்டுவதை, சிவம் முதல் மேதினியீறாம் உலகங்களென்றார். இகரம் தத்துவங்களின் பன்மையைச் சுட்டிற்று. சுட்டவே, இவ்வகைய உலகங்கள் என்பதற்கு, தத்துவங்கள் பலவாயினாற்போல, இத்தத்துவங்களிலிருக்கும் பல வேறு வகைப்பட்ட உலகங்களென்பது பொருளாகக் கொள்க.

தூல வுடம்பில் சிவதத்துவமுதல் பிருதிவி தத்துவம் முடிவான முப்பத்தாறு தத்துவங்களும், சூக்கும சரீரமாயும் அதனைச் செலுத்துவதாயும் உள்ளனவாதலின், தூலவுடம்பில் சிவன் நிற்பன் என்பது, தத்துவங்களிலுள்ள உலகங்களனைத்தும் சிவனுடைய திருமேனி யென்று அறிதற்கு ஏதுவாயிற்று.

ஏது கண்கூடாகவன்றோ இருத்தல்வேண்டும்; தூலவுடம்பில் சிவன் நிற்பன் என்பது கண்கூடாக அறியப்படவில்லையே எனின், கூறுதும். கண்கூடென்பது நிச்சயமாகக் காண்பது. தூலவுடம்பு சடமாயிருந்தும் போக்கு வரவு புரிதல் பற்றியும் பிணமாதல் பற்றியும் அவ்வுடம்பினுள் அதனின் வேறாய உயிருண்டென்பது துணியப்படும். அவ்வுயிர், தான் எண்ணியவாறாகாமை பற்றி, தன்னை நடத்தும் சிவம் தன்னுள்ளிருந்து நடத்த நடக்கு மென்பது பெறப்படும். படவே, உயிரை நடத்தும் சிவனுக்குத் தூலவுடல் திருமேனி யென்பது ஏதுவாகி உலகம் அனைத்தும் சிவனுக்குத் திருமேனி யென்பதைச் சாதித்துத் தருமாறு காண்க. இது, ஒருவன் ஒருத்தி ஒன்று என்பது அவயவப்பகுப் புடைமையால் தோன்றி நின்றழியும்; தோன்றி நின்றழிதலால் கருத்தாவுண்டென்று சாதித்தது போலாம். உலகும் உடலும் சிவனுக்குத் திருமேனி யென்றது, அவற்றுடன் கலந்து நிற்றல் பற்றியே யன்றிப் பிறிதில்லை. இக்கருத்தினை † "அத்துவா மூர்த்தியாக அறைகுவதென்னை யெண்ணின்" என்றற்று

¶ திருக்குறள் மெய்யுணர்தல். செ. ௯.
† சிவஞான சித்தியார். ௧-ம் ௯-ம். செ. ௫௧.

டக்கத்துத் திருவிருத்தத்தாற் றெளிக. உண்மையில் சிவனுக்குத்திருமேனி ஞானமேயாம். இதுபற்றியே 0 சுத்தமெய்ஞான மேனி என்றார்.

உய்தல் - விலகுதல். (௬௬)

(அ - கை.) இவ்வாறு கூறப்பட்ட ஞானசாதகனாகிய ஞானியைப் பூசை செய்தவன் தான் விரும்பிய முத்தியை அடைவனெனக்கூறுகின்றார்.

67. இவ்வகைய ஞானிதனக் கிருநிலத்தோர் கந்தபுட்பம்
மெய்வகைய பலந்தூபம் புனலாடை விளக்கமுது
செய்வகைய மனவாக்குக் காயத்தாற் பூசைசெய்தால்
அவ்வகைய உடம்புடனே வேண்டுமுத்தி யடைவரால்.

(இ - ள்.) இவ்வகைய ஞானி தனக்கு - இவ்வாறு ஞானவொழுக்கமுடைய ஞானிக்கு, இருநிலத்தோர் - பெரிய மண்ணுலகின்கண் உள்ளவர்கள், புனல் ஆடை விளக்கு கந்த புட்பம் பலம் அமுது - நீரால் அபிடேகம் செய்து ஆடை தரித்து சந்நிதியில் திருவிளக்கிட்டு வாசனையோடு கூடிய மலர் மாலை சாத்தி பழவகைகளும் அன்னமும் படைத்து, தூபம் - தூபம் சமர்ப்பித்து, மெய்வகைய மனம் வாக்கு காயத்தால் - உண்மையின்பாற்பட்ட மனத்தாலும் வாக்காலும் காயத்தாலும், செய்வகையபூசைசெய்தால் - செய்யும்வகையினவாகிய சிவபாவனை தோத்திரம் நமஸ்காரங்களால் பூசை செய்யின், அவ்வகைய உடம்பு உடனே வேண்டும் முத்தி அடைவர் - அவ்வாறு செய்த சரீரத்துடனே தாம் விரும்பிய முத்தியைப் பெறுவர் எ - று.

(பொ - ரை.) இவ்வாறு ஞானவொழுக்கமுடைய ஞானிக்கு, பெரிய மண்ணுலகின்கண் உள்ளவர்கள், நீரால் அபிடேகஞ்செய்து, ஆடைதரித்து, சந்நிதியில் திருவிளக்கிட்டு, வாசனையோடு கூடிய மலர் மாலை சாத்தி, பழவகைகளும் அன்னமும் படைத்து, தூபம் சமர்ப்பித்து, உண்மையின்பாற்பட்ட மனத்தாலும் வாக்காலும் காயத்தாலும் செய்யும் வகையினவாகிய சிவ பாவனை தோத்திரம் நமஸ்காரங்களால் பூசை செய்யின், அவ்வாறு செய்த சரீரத்துடனே தாம் விரும்பிய முத்தியைப் பெறுவர் எ - று.

(க - ரை.) ஞானியைப்பூசித்தவர், மறுபிறப்பின்றி, பூசித்தஅப்பிறவியிலேயே முத்தியைப் பெறுவர் என்பதாம்.

செய்வகைய செய்தால் என்பது கந்தபுட்பம் முதலியவற்றோடுஞ் சென்று பொருந்தும்.

மெய்வகைய மனவாக்குக் காய மென்று கூட்டுக.

அவ்வுடம்புடனே என்பது மறுபிறப்பின்மையைக் குறித்தது.

ஞானி, சிவமாய் நிற்றலின், சிவனைப்போல் ஞானியைப் பூசிக்க

0 சிவஞானசித்தியார் எ-ம் சூ-ம். செ. ௬.



வேண்டு மென்பதும், பூசித்தால் சிவனுலடையும்பேறு அடைதல் கூடுமென்பதும் இதனுல் பெறப்பட்டன.

சிவமாய் நிற்பன் என்னும் உண்மையை, * "சாக்கிரத்தேயதீதத்தைப் புரிந்தவர்களுலகிற்சருவசங்க நிவிர்த்தி வந்தபோதனர்களிவர்கள் - பாக்கியத்தைப்பகர்வது வென்னிம்மையிலேயுயிரின் பற்றறுத்துப் பரத்தையடைபராவு சிவரன்றே" என்னுந் திருவாக்கானு முணர்க.

முத்தியைக் கூறவே, விரும்பப்படும் எனையவும் பெறுவர் என்றவாறாயிற்று.

ஈற்றிலுள்ள ஆல் - அசை. (௬௭)

(அ - கை) ஞானியைப் பூசித்தவர் சிவபுண்ணியத்தையும் தூசித்தவர் கொடிய பாவத்தையும் அடைவரெனக் கூறுகின்றார்.

68. சொன்ன ஞானி தனைத்துதி செய்தவர்
முன்னஞ் செய்யற முற்று மடைகுவர்
இன்னல் சொன்னவ ரெய்துவர் வன்பவம்
அன்ன மீபவர் அசைவின்ஞா னஞ்சேர்வார்.

(இ - ள்.) சொன்னஞானிதனை துதிசெய்தவர் - யாவராலும் புகழப்பட்ட சிவஞானியைப் புகழ்ந்து தோத்திரம் செய்தவர், முன்னம் செய் அறம் முற்றும் அடைகுவர் - அவ்வாறு செய்தற்கு முன்னர் அந்த ஞானியால் செய்யப்பட்ட புண்ணியம் அனைத்தையும் பெறுவர், அன்னம் ஈபவர் அசைவு இல்ஞானம் சேர்வார் - (அந்த ஞானி அருந்த) அமுது செய்விப்பவர் சலனமில்லாத சிவஞானத்தைப் பெறுவர், இன்னல் சொன்னவர் - (அந்த ஞானி வருந்தத்) தீயமொழிகளைச் சொன்னவர், வன்பவம் எய்துவர் கொடிய பாவத்தை அடைவர் எ - று.

(பொ - ரை.) யாவராலும் புகழப்பட்ட சிவஞானியைப் புகழ்ந்து தோத்திரம் செய்தவர், அவ்வாறு செய்தற்கு முன்னர் அந்த ஞானியால் செய்யப்பட்ட புண்ணியம் அனைத்தையும் பெறுவர். அந்த ஞானி அருந்த அமுது செய்விப்பவர் சலனமில்லாத சிவஞானத்தைப் பெறுவர். அந்த ஞானி வருந்தத் தீயமொழிகளைச் சொன்னவர், கொடிய பாவத்தை அடைவர் எ - று.

(க- ரை.) ஞானியைப்புகழ்ந்தவர் மிகுந்த புண்ணியத்தையும், இகழ்ந்தவர் கொடிய பாவத்தையும் அடைவர் என்பதாம்.

* சிவஞான சித்தியார் அ-ம் சூ-ம் செ. ௬௫.

மேலைச் செய்யுளில் ஞானியைப் பூசித்தவர், அந்தப் பிறவியிற்றானே முத்தியினை அடைவர் என்றார். எனவே, முத்திக்குச் சிறந்த சாதனம் ஞானம்; ஞானத்திற்குச் சாதனம் சரியை கிரியாயோகங்களாகிய சிவபுண்ணியம் என்னும் விதிபயனற்றதாகுமே யென்னும் ஐயம் நிகழுமாகையால், அதனை நீக்குதற்கு, பூசைவகையிலுள்ள தோத்திரத்தால் சிவபுண்ணியமும், அமுது செய்வித்தலால் ஞானமும் நிகழுமென இச்செய்யுளிற் கூறி ஐயத்தை நீக்கியவாறு அறிக.

ஞானி செய்த புண்ணியம், ஞானியைப் புகழ்ந்தவரைச் சாருமென்பதற்குப் புகழ்ந்தவர் புண்ணியத்தை மிகுதிப்படுத்து மென்பது பொருளாகக் கொள்க. † "சிவஞானச் செயலுடையோர் கையிற்றானம் திலமளவே செய்திடினும் நிலமலை போற்றிகழ்ந்து" என்பதும் இக்கருத்துப்பற்றியது. இன்னல் செய்தவர் வன்பவம் எய்துவர் என்பதனாலும் இக்கருத்து வலியுறுத்தப்படும். இவ்வாறன்றி ஞானிசெய்த புண்ணியம் புகழ்ந்தவரைப் பொருந்து மென்றல் கூடாதென்பதை, ¶ "இவனுலகி லிதமகிதஞ் செய்த வெல்லாம் இதமகித மிவனுக்குச் செய்தார் பாலிசையும்" என்னுந் திருவிருத்தத்திற்கு மாதவச் சிவஞானயோகிகளருளிய உரையாற் றெளிக.

இன்னல் சொன்னவர் என்பதனால், இன்னல் செய்தவரும் எண்ணியவரும் கொள்ளப்படுவர்.

புகழ்தலால் புண்ணியம் உண்டாமென்பது பொருந்தும் அன்னமீதலால் சிவஞானம் உண்டாமென்பது எவ்வாறு பொருந்து மெனின், கூறுதும்:—

§ "மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை - தானந்தவம் உயர்ச்சி தாளாண்மை-தேனின்-கசிவந்தசொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்-பசிவந்திடப் பறந்துபோம்" என்னும் திருவாக்காலும், 0 "அழிபசி" என்னுந் திருவாக்காலும் பசியானது தவத்தை அழிக்குமென்பதும், ‡ "அன்னமதனை யருந்தவரை யருத்தினார்களவர் பலத்திற் - றன்னுவார்களொருபாதியவர்தாமொருபாற்றுன்னுவரே" என்னுந் திருவாக்கால் தவமுடையார்க்குப் பசி நீங்கும் பொருட்டு அன்னத்தை உண்பித்தவன் தவமுடையார் தவப்பலத்தின் பாதியைப் பெறுகின்றானென்பதும் பெறப்படும். படவே, ஞானி

† சிவஞான சித்தியார் அ-ம் சூ-ம் செ. உகூ.
¶ ஷை கo-ம் சூ-ம். செ. க.
§ நல்வழி. செ. உரு.
0 திருக்குறள். ககை. செ. கு.
‡ சிவதருமோத்தரம். ஏழாவது சுவர்க்க [illegible] செ. கூச.

# செய்தித்திரட்டு.

தூத்துக்குடி:— சிவநேசச் செல்வர் சபையின் உஉ-வது ஆண்டு விழா, முனிசிபல் கமிஷனர் திருவாளர் C. அமிர்த கணேசன் B. A. அவர்கள் தலைமையில் அறிஞர்களின் விரிவுரைகளுடன், வைகாசி உ௦உயிலும், திருவிளையாடற் புராணப் பிரசங்கப் பூர்த்திவிழா, மதுர ஆசிரியர் திரு, K. இராதாகிருஷ்ணையரவர்கள் செய்யுட்களைப் படிக்க, பிரசங்க ரத்னம் திரு, மு. பொன்னம்பலம் பிள்ளையவர்கள் உரை பகர, உகவுயிலும் செவ்விதாக நிறைவேறின.

திருப்பணிகள்:— பூந்தமல்லிக்கு அடுத்த குந்தம்பாக்கத்தின் அணித்தாய் நரசிங்கபுரத்தில் பர்வதவர்த்தினி சமேத, பர்வதராஜேஸ்வர சுவாமிக்கு சிவாசாரியர்களால் செய்யப்பெறும் ஆலய சீரணோத்தாரண திருப்பணிநிறைவேறி இம்மாதம் அஷ்டபந்தன மகா கும்பாபிடேகம் நடைபெறும். பர்வதராஜபுரத்தில் திரௌபதி சமேத தர்மராஜர் கோயில் சிவாசாரியர்களாலும், திரு, இராமகிருஷ்ணையராலும் இம்மாதத்தில் திருப்பணி தொடங்கப்பெறும்.

திருநல்லூர்ப்பெருமணம்:— திருஞானசம்பந்தப் பெருமானார் திருமணங்கொண்டு முத்தியருளிய இத்திருத்தல சிவாலயத்தில் அஷ்டபந்தன மகாகும்பாபிடேகம் வைகாசி கூகவ மாண்புடன் நடைபெற்றது.

திருவாமாத்தூர்:— கௌமார மடாலயம் மஹான் வண்ணச்சரபம் உயர்திரு, தண்டபாணி சுவாமிகளின் முப்பதாவது குருபூஜை இம்மதி கூவ திருவோண நாளில் மகாபிடேக அலங்கார ஆராதனைகளுடன் நடைபெறும். மகேஸ்வர பூஜை முடிந்து மகோபந்நியாசங்களும் திருவுலாவும் செய்யப்பெறும்.

திருவம்பர் மாகாளம்:—சோமயாஜி மாறநாயனாரின் சோமயாகமஹோத்ஸவம் வைகாசி உஉவ தொடங்கி உகூவ நிறைவேறியது.

மஹாகும்பாபிடேகம்:— நாசிங்கன் பேட்டைக் கடுத்த திருவாலங்காடு ஸ்ரீ உத்பலேசுவரிசமேத உத்பலேசுவரர் ஆலயத்தைப்புதுக்கி கருங்கற்றிருப்பணி செய்து நிறைவேறி வைகாசி உகூவ மகாகும்பாபிடேகமும் மகாபிடேகமும் திருவுலாவும் சிறப்பாகச் செய்யப்பெற்றன.

வெள்ளிவினைத்துக் கொள்ளைபோயிற்று:—காரைக்குடியில் ஒருதனிகர் வீட்டில்சவத்தின் பாங்கர்வைத்தவிளக்குவெள்ளியாயிருந்ததால்கொள்ளைபோயிற்றாம்.

திருத்தென்குடித்திட்டை:— கருந்திட்டைக்குடி ஸ்ரீ பெரியநாயகி சமேத ஸ்ரீவசிஷ்டேஸ்வரசுவாமி வைகாசி ககவ முதல் வைசாகபர்வ மஹோத்ஸவம் கொண்டு இம்மதி உவ சப்தஸ்தானத் திருப்பவனி வந்தருளினர்; வழக்கம்போல சுவாமியை வரவேற்று உபசரிக்கப் பெற்றன.

ராவ்சாஹிப்:— தஞ்சை கருந்திட்டைக்குடி தமிழ்ச் சங்கத் தலைவரும் செந்தமிழ்ப் புரவலருமாகிய திருவாளர், த. வே. உமாமகேசுவரன் பிள்ளை B. A. B. L. அவர்கட்கு அரசியலார் சக்கரவர்த்தி பிறந்த நாளாகிய 3—6—1935ல் "ராவ்சாஹிப்" பட்டமும், வெள்ளி விழா வைபவத்தை முன்னிட்டு பதக்கமும் வழங்கப்பெற்றமைக்கு நன்றிபாராட்டி மகிழ்ச்சியுறுகின்றோம். பிள்ளை அவர்களின் பெருமதிப்புக்குரிய சிறந்த பட்டங்களை மேலும் வழங்கக்கூடு மென்பது பல அறிஞர்களின் பெருவிருப்பாகும்.

**கவர்னர் பேட்டி:**— கனம் செட்டிநாட்டு ராஜா அவர்கள் சென்னை கவர்னர் துரையவர்களை உதகமண்டலத்தில் அரசியற் காரியாலயத்தில் 11—6—1935ல் பேட்டி கண்டு பேசினர்.

**கல்லல்:**— தனவணிகப் பெரியார்களுள் ஒருவரும், பரோபகாரப் பண்பினரும், தெய்வ நம்பிக்கையுடன் உள்ளூர் சிவாலயத் திருப்பணியாதிய சிவபுண்ணியங்களில்பங்குபெற்றவரும் இளம்பிராயத்திலிருந்தேகாரியநிர்வாகத்தைக்கைக்கொண்டு திறமையுடன் பெரும் பொருளீட்டி மரபினர் மதிக்க வாழ்ந்தவரும், ஒன்பது நகரக்கோயில்களுள் ஒன்ருன, வயிரவன் கோயிலையுடையவருமான திருவாளர், ஆ. மு. ஆ. முருகப்ப செட்டியாரவர்கள் தமது எசுவது ஆண்டாகிய இவ்வாண்டு வைகாசி உஉ நள்ளிரவில் செஞ்சடைவானவன் திருவடி சேர்ந்தனர். இவர்களின் ஆன்மா இன்புறவும் இவர்களின் சந்ததியார் ஆறுதலடையவும் வேண்டுகிறேம்.

**பதக்கங்கள் பெற்றனர்:**— வேந்தர் வெள்ளிவிழா வைபவத்தை முன்னிட்டு, தனவணிக மரபினருள் திருவாளர்களான, கனம் செட்டிநாட்டு ராஜா, சர் அண்ணுமலை செட்டியார், குமாரராஜா, முத்தைய செட்டியார், மு. சித. மு. சிதம்பரம் செட்டியார், திவான்பகதூர் அ. மு. முருகப்ப செட்டியார், ராவ்பகதூர் உ. அ. பெரி. மு. அருணுசலம் செட்டியார், ராவ்பகதூர் ச. வீ. அழ. ராம. இராமநாதன் செட்டியர், மு. ராம. பெரியணன் செட்டியார் ஆகிய எழுவர் பதக்கங்கள்பெற்றுள்ளார்கள்.

**தஞ்சை பெரிய கோயில் மின்சார விளக்கம்:**— இப்பெரிய கோயிலுக்கு தீபலோபமின்றி மின்சார விளக்குகள் அமைக்க, தஞ்சை அரசர் அறநிலையப்புரவலராகிய திருவாளர், ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளையவர்கள்முன்னின்று ஸ்ரீ பிரஹதீச்வர சுவாமிகோயில் எலக்ட்ரிபிகேஷன் கமிட்டி நிறுவியுள்ளார்கள். "விளக்கிஞற் பெற்ற இன்பம் மெழுகிஞற் பதிற்றியாகும்" என்பது தேவாரம். பணம் உதவுவோர் மேடி கமிட்டி. தஞ்சை அரண்மனை தேவஸ்தானம் ஆபீசில் சேர்க்கலாம்.

**பாகனேரி:**—ஸ்ரீ வெண்ணெயுண்டபெருமாள் கோயில் திருப்பணி நிறைவேறி வைகாசி உ௩ உ காலை அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகமும், திருவுலாவும் மகாவைபவமாக நடைபெற்றன.

**நெற்குப்பை:**—உடற்பயிற்சிச்சாலை திருவாளர், பழ. பெரி. பெரி. பெரிய கருப்பன் செட்டியாரவர்களின் நன்முயற்சியால் வைகாசி உசவ காலையில் நிறுவப்பெற்றது. திருப்பத்தூர் சபமாஜிஸ்டிரேட் மகா-ள-ள-ஸ்ரீ R. S. சுப்பையா பிள்ளையவர்கள் தலைமையில், கடவுள் வாழ்த்துடன், பண்டிதமணி முதலானவர்களின் விரிவுரைகளும் நிகழ விழா இனிது கொண்டாடப்பெற்றது.

---

## "சிவநேசன்" ஆண்டுத்தொகை விவரம்.

| | | | |
|---|---|---|---|
| உள்நாட்டிற்கு | ரூ 2--4--0 | அதற்கு மூலதனம் | ரூ 30--0--0 |
| அயல்நாட்டிற்கு | ரூ 3--0--0 | அதற்கு மூலதனம் | ரூ 40--0--0 |

தனிப்பிரதி அணு 0—3—0

## விளம்பர விகிதம்.

வியாபார விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 4—0—0

நீதிமன்ற விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 8—0—0

---

பலவான்குடி 'சிவநேசன்' அச்சியந்திரசாலையில், பத்திராதிபர் ராம. கு. ராம. இராமசாமி செட்டியாரால் அச்சியற்றிவெளியிடப்பெற்றது.